

# வரதர்
# பவள விழா மலர்

யாழ்

மூதறிஞர்

# வரதர்

(தி. ச. வரதராசன்)

# பவள விழா

(1924 - 1999)

# மலர்



இலக்கிய வட்டம்





நூல் : 'வரதர் பவள விழாமலர்'

பதிப்பு : மார்ச் 2002

வெளியீடு : யாழ். இலக்கிய வட்டம்
75/10A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப் பதிவு : ஆனந்தா அச்சகம்
226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.



# வெளியீட்டுரை

ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளி, மூதறிஞர் தி. ச. வரதராசன் (வரதர்) அவர்களின் பவள விழா மலரை யாழ் இலக்கிய வட்டம், மகிழ்வுடனும் பெருமிதத்துடனும் வெளியிட்டு வைக்கின்றது.

கடந்த ஆறு தசாப்தங்களாக ஈழத்தின் இலக்கியவுலகிற்குச் சிறுகதைப் படைப்பாளியாகவும், கவிஞராகவும், பல்வேறு சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், பல நூல்களின் பதிப்பாளராகவும் விளங்கும் வரதரின் பவள விழாவைக் கொண்டாடுவதன் மூலம் ஈழத்திலக்கியத்தின் செழுமையைப் போற்றுவதாக நினைக்கின்றோம்.

ஈழத்து இலக்கியத்தில் வரதர் ஒரு சகாப்தம், சிறுகதைத் துறைக்குப் செழுமை சேர்த்த படைப்பாளி, பல படைப்பாளிகளுக்கு முன்னோடி, மறுமலர்ச்சியாளன். அத்தகைய பெருமகனின் சிறப்புகளை வியந்து, கட்டுரைகளையும் செய்திகளையும் வழங்கிய அறிஞர்களுக்கும் எம் நன்றி. வரதர் அவர்கள் பல்லாண்டுகள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து ஈழத்து இலக்கியவுலகிற்கு இன்னமும் காத்திரமான பங்களிப்பினை செய்ய நீண்ட ஆயுளை அளிக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆனைக்கோட்டை
15.02.2002

*புத்தொளி ந. சிவபாதம்* J.P
பொருளாளர்
யாழ். இலக்கிய வட்டம்

# மூதறிஞர் 'வரதர்' தி.ச.வரதராசன் வாழ்வுக் குறிப்புக்கள்

முழுப்பெயர் : தியாகர் சண்முகம் வரதராசன்

தந்தை பெயர் : தியாகர் சண்முகம்

தாயார் பெயர் : சண்முகம் சின்னத்தங்கம்

பிறந்த திகதி : 1924 - யூலை 01

கல்வி கற்றபாடசாலைகள் : பொன்னாலை அமெரிக்க மிஷன் தமிழ்ப்பாடசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை, காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை.

சகோதரிகள் : இரு தமைக்கையர் : இரத்தினம்மா, அன்னம்மா. ஒரு தங்கை: தங்கச்சியம்மா

துணைவியார் : மகாதேவியம்மா

பிள்ளைகள் : செந்தாமரை, தேன்மொழி, மலர்விழி.

தொழில் : அச்சக முகாமையாளர், நூல் வெளியீட்டாளர்.

புனைபெயர்கள் : வரதர், வரன்

முதல்அச்சில் வெளிவந்த கட்டுரை : 1939, ஈழகேசரி - மாணவர்களுக்கான கல்வி அனுபந்தம்

முதல் அச்சில் வந்த சிறுகதை : கல்யாணியின் காதல் . 1940, ஈழகேசரி ஆண்டுமலர்.

படைத்த சிறுகதைகள் :

ஈழகேசரியில் :

1) கல்யாணியின் காதல் (1940), 2). விரும்பிய விதமே (1941), 3) கல்யாணமும் கலாதியும் ((1941), 4). குதிரைக்கொம்பன். (1941), 5) தந்தையின் உள்ளம் (1941), 6). ஆறாந் தேதி முகூர்த்தம் (1941), 7). கிழட்டுநினைவுகள் (1941), 8) விபசாரி (1943),



**மறுமலர்ச்சி :**

9). இன்பத்திற்கு ஓர் எல்லை (1946), வென்றுவிட்டாயடி ரத்தினா, 10). ஜோடி (1947), 11). அவள் தியாகம் (1948), 12). வேள்விப்பலி (1948)

**சுதந்திரன் :**

13). மாதுளம்பழம் (1950)

**ஆனந்தன் :**

14). கயமை மயக்கம், 15). உள்ளுறவு,

16). வாத்தியார் அழுதார்.

**தினகரன் :**

17) பிள்ளையார் கொடுத்தார், 18) வீரம், 19). ஒரு கணம்

**வரதர் புத்தாண்டு மலர் :**

20). உள்ளும் புறமும்

**கலைச்செல்வி :**

21) புதுயுகப்பெண்

**தமிழ் எழுத்தாளர் சங்கக் கதையரங்கு :**

22) வெறி

**மத்தியதீபம் :**

23) கற்பு

**புதினம் :**

24) இன்று நீ வாழ்திருந்தால்.... 25). ஓ இந்தக்காதல்!

**மல்லிகை :**

26). பொய்மையும் வாய்மையிடத்து. 27) தமிழ்மொழி தேய்கிறதா?, 28). உடம்பொடு உயிரிடைநட்பு,

29) தென்றலும் புயலும் (1976)

படைத்த குறுநாவல்கள் :

1) வென்றுவிட்டாயடி இரத்தினா 2). உணர்ச்சி ஓட்டம், 3).தையலம்மா (மறுமலர்ச்சி)

படைத்த கவிதைகள் :

ஓர் இரவிலே, (ஈழகேசரி), அம்மான் மகள் (மறுமலர்ச்சி), யாழ்ப்பாணத்தார் கண்ணீர் - குறுங்காவியம், (வீரகேசரி)

நூல்களாக வெளிவந்த ஆக்கங்கள் :

1) நாவலர், 2) வாழ்க நீ சங்கிலி மன்ன, 3). கயமை மயக்கம், (-மறுபதிப்பு 'வரதர் கதைகள்), 4).மலரும் நினைவுகள் (சுயவரலாற்றுத் தரிசனம்), 5) பாரதக்கதை, 7). சிறுகதைப் பட்டறிவுக்குறிப்புகள்.

நடத்திய சஞ்சிகைகள் :

1). மறுமலர்ச்சி (1946), 2). வரதர் புத்தாண்டு மலர் (1949) 3) ஆனந்தன் (1952), 4). தேன்மொழி (1955), 5). வெள்ளி (1957), 6). புதினம் (1961), 7) அறிவுக்களஞ்சியம் (1992), 8) மீண்டும் மறுமலர்ச்சி (1999)

வெளியிட்ட நூல்கள் :

1) இலக்கியவழி *(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)*, 2). வள்ளி *(மஹாகவி)*
3). கயமைமயக்கம் *(வரதர்)* 4).தெய்வப்பாவை *(சொக்கன்)*
5). மூன்றாவது கண் *(கனகசெந்தில்நாதன்)* 6) பிரபந்தப்பூங்கா *(கனகசெந்தில்நாதன்)*
7) இசைஇலக்கணம் *(சங்கீதபூஷணம், சந்திரசேகரம்)*
8). தமிழ்மரபு *(வித்துவான் பொன். முத்துக்குமாரன்)*
9). சிலம்பின் சிறப்பு *(பொன். முத்துக்குமாரன்)*
10). இலக்கியமும் திறனாய்வும் *(பேராசிரியர் கைலாசபதி)*,
11). கோபுரவாசல் *(முருகையன்)* 12). 24மணிநேரம் *(நீலவண்ணன்)*
13). 12மணிநேரம் *(நீலவண்ணன்)* 14). மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது *(நீலவண்ணன்)*
15). யானை *(செங்கைஆழியான்)*. 16). மழையில் நனைந்து *(செங்கைஆழியான்)*
17). விடிவெள்ளி பூத்தது *(சோமகாந்தன்)* 18). ஓட்டுமா *(சாந்தன்)*,
19). சிலம்பொலி *(நாவற்குழியூர் நடராசன்)*, 20). அமிர்தலிங்கம் *(சாமிஜி)*
21). 'நாம் தமிழராகிடுவோம்' *(வி. பொன்னம்பலம்)*
22). திருக்குறள்பொழிப்புரை, *(தி. ச. வரதராசன்)* 23). ஆங்கில தமிழகராதி *(தி. ச. வரதராசன்)*
24). வரதரின் பலகுறிப்பு, 25)திருக்குறள் - 100
26). பாதைமாறியபோது - *(கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை)*
27). அவன்பெரியவன் *(நாகராசன்)*
28). சுதந்திரமாய்ப்பாடுவேன் *(திருச்செந்தூரன்)* 29). இராமன் கதை *(சம்பந்தன்)*
30). போக்கிரிமுயலாரின் சாகசங்கள் - *(சொக்கன்)*
31). வேப்பமரத்தடிப் பேய் - *(சி. சிவதாசன்)*
32). திருமலைக்கொடுமைகள் *(கா. யோகநாதன்)*
33) ஈழத்துச் சிறுகதை வரலாறு *(கலாநிதி க. குணராசா)*
இன்னும் சில





மேலதிக
அரசாங்க அதிபர்
து. வைத்திலிங்கம்
பொன்னாடை போர்த்துகிறார்.



'புத்தொளி'
மாலை அணிவிக்கிறார்



இல்லத்தில் நடைபெற்ற பவள விழாவில் உறவினர்களுடன்



கலையரசு ஏ.ரி. பொன்னுத்துரை கௌரவிக்கிறார்





ஒரு இலக்கிய விழாவின் போது மேடையில்



புதுமைலோலனின் நூலுக்கு
முதற் பிரதி பெறுநராக வரதர்
புதுமைலோலன், சொக்கன், சிற்பி, செங்கைஆழியான்



பார்வையாளனாக



பேர்த்தியுடன் குதுகலிக்கும் வரதர்



இலக்கிய நண்பரும் தொழிலதிபருமான
வேலணை வீரசிங்கம் தம்பதியுடன் வரதர்தம்பதி



யோகேஸ்வரி சிவப்பிரகாசம், வரதர்,
பொ. சண்முகநாதன்




'மரணங்கள் மலிந்த பூமி' வெளியீட்டுவிழாவில்
ஏ.ரி. பொன்னுத்துரை, செங்கைஆழியான், க. சிவராமலிங்கம்
ஆகியோருடன் வரதர்



'மறுமலர்ச்சி' வெளியீட்டு விழாவில் செங்கை ஆழியான் -
சரோஜா சிவச்சந்திரன், வரதர், பேராசிரியர் நா. சுப்பிரமணியம்,
காலநிதி எஸ். சிவலிங்கராசா, சிற்பி





தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடந்த
இலக்கிய விழாவில்
க. சட்டநாதன், நந்தி, சு. பாலசுந்தரம், மரியசெவியர்
ஆகியோருடன்



யாழ். பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினருடன்
செங்கை ஆழியான் - வரதர் - சிற்பி




யாழ். பல்கலைக்கழகத்தமிழ் மன்ற விழாவில் வரதர்
*செங்கைஆழியான் – பேராசிரியர் நா. சுப்பிரமணியம், யோகேஸ்வரி, சிவப்பிரகாசம்.*



சொக்கன், நந்தி, வரதர், சு.வே ஈழத்து இலக்கியத்தை எழில்செய்து பார்த்த இவர்கள் அகவை எழுபதுக்கும் அப்பாலே சென்றவர்கள்.





குடும்பத்துடன்
வரதர் (1968)



நாவலர் மண்டபத்தில்
மங்கள விளக்கேற்றி விழா
வொன்றினைத் தொடக்கி
வைக்கிறார் வரதர்

# காரியகாரர், கலைஞருமானவர்

– முருகையன்

போன நூற்றாண்டின் முதலாம் பாதியில்
வரதர் எனப்படும் 'ஒருவர்' தோன்றி
நாற்பது களிலே வாலிபர் ஆயினார்

வடக்கத்தை யாரின் மறுமலர்ச்சியை
எழுத்தாண்மை என்பதாம் எண்ணக்கருவை
எங்கள் இலங்கையில் இயற்றிக் காட்டிட
வாலிபர் வரதர் மனத்தில் முன்னினார்
தென்னாட்டவர்கள் 'மணிக்கொடி' நாட்டினால்,
இந்நாட்டு இவரோ, இளைஞரைக் கூட்டி
'மறுமலர்ச்சி' யையே நிறுவிக் காட்டினார்.

'கசெ' நடராசா, 'கதி' சம்பந்தன்
இலங்கையர் கோனுடன் வைத்தியலிங்கம்
ஆனாசேனா முருகா னந்தன்
ஆனா நானாக் கந்தசாமியார்
உருத்திரு மூர்த்தி எனப்படும் 'மஹாகவி'
இந்த மாதிரி இளையோர் சூழ
வரதர் இலங்கையில் வலம் வரத் தொடங்கினார்
'மறுமலர்ச்சி' ஆகிய சஞ்சிகை
சிறுகதை, கட்டுரை, செந்தமிழ்க் கவிதை
நடைச்சித் திரங்கள், நிகழ்ச்சித் துணுக்குகள்,
ஏந்தி இங்கே எம்மிடை வந்தது

இலக்கியத் துறையிலே எழும்பிய ஆர்வம்
அச்சியல், பிரசுரம், அறிவோர் வட்டம்



என்றவாறாய் ஏற்றம் பெற்றது
பஞ்சாட் சரப் பெயர் பூண்ட பண்டிதர்
கனக - செந்தி, சொக்கன், சாரதா

படித்தோர், படிப்போர், படைப்போர்
சுவைப்போர்
என்ற பாங்கிலே இலக்கிய வட்டம்
விரிந்து, பரந்து மெல்ல வளர்ந்தது
பண்டித மணியின் 'இலக்கிய வழி'யையும்,
'கயமை' முதலிய சிறுகதைகளையும்
புத்தகமாக்கிப் பரப்பிடும் முயற்சிகள்
சமாந்தரமாகச் சம்பவித் திட்டன

வரதர். ஆளோ அமைதிப் பேர்வழி
ஆர்ப்பாட் டங்களில் நாட்டம்இல் லாதவர்
கடுமையாய் எதனைப் பற்றியும் சும்மா
அலட்டிக் கொள்ளும் பழக்கம் இல் லாதவர்
பாரிய சிற்சில காரியங் களையும்
இலேசாய் முடித்திட எண்ணிய ஒருவர்
'அநாயா சம்' தான் அவரது சொரூபம்
தாழ்ந்த குரலிலே சாதா ரணமாய்
எதனையும் எடுத்துப் பேசும் இயல்பினர்

அப்படிப்பட்ட வரதரின் தலையினுள்
எப்படிப்பட்ட 'இயக்கம்' இருந்தது!
மறுமலர்ச்சியுடன் தொடங்கினார் ஆயினும்
புதுப்புதுத் திட்டம் போடுவர், அடிக்கடி

அவற்றின் பலாபலன் - பேறுகள் எத்தனை!
'புதினம்', 'ஆனந்தன்', 'தேன்மொழி', 'வெள்ளி',
'அறிவுக் களஞ்சியம்', அப்பப் பா.... இவை
தொடங்கப்பட்டன, தவழ்ந்தன, தத்தின
எழுந்த நின்றன, நடந்தன, ஓடின

※ ※ ※

ஓய்வே இன்றி தேடி ஓடல்தான்
உய்தியின் நெறி என உணர்ந்தோர் கூறுவர்
அப்படிப் பட்ட பாதையில் நடந்தார்
காரியகாரர் - கலைஞரும் ஆனவர்
வரலாறென்ற வழி நடைப் பாதையில்
சுவடுகள் பதித்தவை வரதரின் முனைவுகள்

※ ※ ※

வரதர் வரதர் என்று பல பாடி
ஒருவரைப் புகழுவர் உற்ற சிநேகிதர்
இலேசுப் பட்டவர் இல்லை, இவ்வரதர்

தென் தமிழ் நாட்டார் 'மணிக்கொடி' நடத்தினால்,
இந்நாட் டினிலே, இங்கே -
'மறுமலர்ச்சி' யையே நிறுவினார் வரதரே!





'ஈழகேசரிச் சிறுகதைகள்' வெளியீட்டு விழாவில் மூத்தபடைப்பாளி 'வரதர்' கௌரவிக்கப்படுகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா பொன்னாடை போர்த்துகிறார். 'செங்கை ஆழியான்' மாலையணிய நிற்கிறார்.

ஈழத்தின் மூத்தபடைப்பாளி; சிறுகதை எழுத்தாளர்; புதுக்கவிதையாளர்; நாவலாசிரியர்; இதழியலாளர்; பதிப்பாசிரியர்; மூதறிஞர்

# வரதர்

(தி. ச. வரதராசன்)

அவர்களின்

# பவள விழா மலர்.




*பேராசிரியர் அ. சண்முகதாஸ்*

**(முதுதமிழ்ப் பேராசிரியர், பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வுபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)**

**அவர்களின்**

# வாழ்த்துரை

வரதர் - இன்று எம்மிடையே நின்று, இருந்து,வாழ்கின்ற, எம்முடைய நவீனஇலக்கிய வரலாறு.

'மறுமலர்ச்சி' என்னும் இதழ் இங்கு தொடங்கிய காலம் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியிலே மறுமலர்ச்சி தோன்றிய காலம். அன்று ஈழகேசரியிலும், தொடர்ந்து மறுமலர்ச்சியிலும் எழுதத் தொடங்கிய தி.ச.வரதராசன் (வரதர்), இன்றும் எழுதிக் கொண்டிருக்கிறார். பவள விழாக்காணும் அவர் சிறுகதை, கவிதை ஆகியன படைக்கும் ஆக்க இலக்கியப் படைப்பாளியாக எம்மிடையே வாழ்ந்துவருகிறார். காலமாற்றத்தினால் ஏற்பட்டுவந்த அரசியல், பொருளியல், சமூக, பண்பாட்டு மாற்றங்கள் 'மக்கள்' வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களின் விளைவான உணர்வுகளையும் அவ்வுணர்களைத் தாங்கும் உருவங்களையும் தன்னுடைய ஆக்க இலக்கியங்களிலே படைத்து வருபவர் வரதர்.

'மறுமலர்ச்சி' இதழுடன் இலக்கியப்பணி தொடங்கிய வரதர், 'இதழ்கள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவன' என்பதை உணர்ந்து பலவற்றை வெளியிட்டு வந்துள்ளார். 'ஆனந்தன்', 'புதினம்', 'தேன்மொழி', 'வெள்ளி', 'அறிவுக்களஞ்சியம்', 'வரதர் ஆண்டு மலர்' போன்றவற்றைக் குறிப்பிடலாம். போர்ச்சூழல் காரணமாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்ட போது, இயல்பு நிலையான இதழ்கள், பத்திரிகைகள் முதலிய ஊடகங்கள் பாதிப்படைந்த வேளை எங்கள்



பிள்ளைகளுடைய பொது அறிவினை வளர்ப்பதற்காக. வரதர் அவர்கள் 'அறிவுக்களஞ்சியம்' என்னும் இதழைத் தொடக்கி நடத்திப் பணியாற்றினார்.

வரதர் ஐயா அவர்களுடைய நூல்வெளியீட்டுப்பணி விதந்து கூறப்பட வேண்டியது. ஈழத்துப் பல இலக்கியப் படைப்பாளிகள் தமிழறிஞர்கள் ஆகியோருடைய நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். பண்டிதமணி, இலக்கிய கலாநிதி, சி. கணபதிப்பிள்ளை அவர்களுடைய முதலாவது நூல் (இலக்கியவழி) இவரால் வெளியிடப்பட்டது. கலாநிதி கைலாசபதி, இரசிகமணி கனக செந்தில்நாதன், முருகையன், மஹாகவி, செங்கை ஆழியான், சொக்கன், சாந்தன், சோமகாந்தன் முதலிய பலருடைய நூல்கள் வரதரினாலே வெளியிப்பட்டன.

வரதர்ஐயா அவர்களுடைய பவள விழா கொண்டாப்படும் போது அவருடைய இலக்கியப் பணி எல்லோராலும் நினைவு கூரப்படும். எங்களிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நீண்டகால இலக்கிய அனுபவமுடையவர்கள் சிலரே. அவர்களுள் ஒருவர் வரதர் ஆவர். அவர் இன்றும் தம் இலக்கியப் பணியிலிருந்து ஓயவில்லை. அவர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து தம் இலக்கியப் பணிகளைத் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

யாழ். பல்கலைக்கழகம் – ***பேராசிரியர் அ. சண்முகதாஸ்***
05 - 08 - 2002

கலாநிதி எஸ். சிவலிங்கராசா
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

ஈழத்து நவீனதமிழ் இலக்கிய 'முன்னவர்'களில் ஒருவராக விளங்குபவர் 'வரதர்' என எல்லோராலும் அறியப்பட்ட தி.ச. வரதராசன் 1924 ஆம் ஆண்டு பொன்னாலைக் கிராமத்திலே பிறந்தார். பொன்னாலை என்றதும் அங்கு எழுந்தருளியிருக்கும் வரதராசப் பெருமாளின் திருத்தலத்தையே ஈழத்தவர் நினைத்துக் கொள்வர். வரதராசப் பெருமாளின் திருவருளை முன்னிட்டுப் போலும் பெற்றோர் இவருக்கு வரதராசன் என்று பெயரிட்டார்கள்.

உயர்ந்த உருவம், தூயவெண்ணிறவேட்டி, வெள்ளை அரைக்கைசேட், கன்னவகிடெடுத்து அழகாகச் சீவப்பட்ட 'கொக்கிறகுத்' தலை, ஒழுங்காக வெட்டி நறுக்கப்பட்ட வெள்ளை மீசை, அமைதியான, மிக அடக்கமான பேச்சு, இன்றும் உடல் உளநலத்தோடு உறவாடிக்கொண்டிருக்கும் வரதர் பன்முக ஆளுமை கொண்டவர்.

சிறுகதை, குறுநாவல், கவிதை, புனைகதை சாரா எழுத்துக்கள், பத்திரிகை, பதிப்பு முதலான பல துறைகளில் தனது தனித்துவத்தைப்பதித்தவர்.

ஈழத்தச்சிறுகதைபிறந்து வளருகின்ற காலத்திலே அதன்வளர்ச்சியோடு தன்னை இணைத்துக்கொண்டவர். ஈழகேசரிப்பண்ணையிலே 'விதைக்கத்' தொடங்கி, மறுமலர்ச்சி 'பூங்காவிலே' மலர்களைக்கண்டவர். இன்று வரை 'அறுவடை' செய்து கொண்டிருக்கும் ஓர் இலக்கிய வேளாண்மைக்காரர்.



தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் 'மணிக்கொடிக் குழுவினர்' என்பது போல, ஈழத்துச் சிறுகதைவரலாற்றில் 'மறுமலர்ச்சி' குழு ஒன்று உருவாகக் 'கால்கோள்' இட்டவர்களில் முதன்மையானவர்.

சமூகப்பார்வையுடன் தனிமனித உணர்வுகளின் அவசங்களை நேர்த்தியான சிறுகதைகளாகப்படைத்த ஆரம்பகால எழுத்தாளர்களில் வரதரும் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர். பொருளுக்கேற்ற உருவம், உருவத்திற்கேற்ற பொருள் என்றவகையிலே இவரது கதைகள் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். 90க்கு மேற்பட்ட கதைகளை எழுதிய வரதரின் படைப்புக்களைக் கால வரிசையிலே ஒழுங்குபடுத்தினால் அவர் வளர்ச்சிப்படிமுறை தெளிவாகத் தெரியவரும். பழைமையில் நின்று புதுமையை நோக்கி அவர் எடுத்துவைத்த அடிகளை அவரது படைப்புக்களை ஆய்வுசெய்தோர் சுட்டிக்காட்டியுள்ளனர். அரைநூற்றாண்டுகாலத்திற்கு மேற்பட்ட இலக்கிய அனுபவமுடைய வரதர் தொட்டுப்பார்க்காத துறைகளே இல்லையெனலாம்.

புதுக்கவிதை என்ற தொடரே கர்ணகடூரமாக ஒலித்த காலகட்டத்திலே ஈழகேசிரியில் வரதர் புதுக்கவிதை எழுதினார். ஈழத்துப்புதுக்கவிதை மரபின் 'மூலவர்' என்று இன்று போற்றப்படுகின்றார். இவரது கவிதைகள் யாப்பு, சீர், தளை என்ற கட்டுமானங்களுக்குள் அகப்படாமல் உள்ளத்து உணர்வை கலாபூர்வமாகச் சொல்லுவன. 'யாழ்ப்பாணத்தார் கண்ணீர்' இவரது கவிதைப்படைப்புக்களில் விதந்து குறிப்பிடப்படவேண்டியது.

40,50களின் யாழ்ப்பாணச் சமூகத்தின் வாழ்வியல் கோலங்களை 'மலரும் நினைவுகள்' ஆகத்தந்திருக்கின்றார். பண்பாட்டுவிழுமியங்களைப் பகுத்தாய்வு செய்யும் சமூகவியல் ஆய்வாளர்களுக்கு ஒரு கையேடாக, 'மலரும் நினைவுகள்' அமைந்துள்ளது எனலாம். அழகியநடையில் அமைந்த 'மலரும் நினைவு'களில் ஒரு ஆக்க இலக்கியகாரரின் கைவண்ணத்தைத் தரிசிக்க முடிகின்றது.





படிப்புத்தேவை, பரீட்சைத்தேவை என்பவற்றுக்கும் அப்பால் பொது அறிவைவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு வரதரின் 'பலகுறிப்பு' வெளிவந்தது. இலங்கையிலே தமிழில் இத்தகையதொரு நூல் இதற்கு முன் தோற்றியதாக எனக்குத் தெரியவில்லை. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் 'அபிதானகோசம்' கலைக் களஞ்சியப்பாணியில் அமைந்தபோதும் வரதரின் பலகுறிப்புப் பண்பினைக் கொண்டிருக்கவில்லையெனலாம்.

சிறுசிறு உரைநடைநூல்களையும் காலத்தின் தேவைகருதி வரதர் வெளியிட்டார். பாரதக்கதை, நாவலர் முதலான அவரது நூல்கள் 'இக்கால உரைநடை' நூல்களாக அமைந்தன. செம்மையான உரை நடைக்குள்ளேயும் ஒரு ஆக்க இலக்கிய கர்த்தா 'கரந்துறைவதை' இவரது பாரதக்கதையைப் படிப்போர் உணர்வர்.

ஈழத்து இதழியல் வரலாற்றிலே தமக்கெனத் தனியானதோர் இடத்தை வகிப்பவர் வரதர். மறுமலர்ச்சியுடன் இதழியல் வாழ்வுக்கு வந்த வரதர், அவ்வப்போது பல இதழ்களை வெளியிட்டுள்ளார். அவரது மறுமலர்ச்சிக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றிலே அழியாததோர் இடமுண்டு. இவரது ஆனந்தன், புதினம், வெள்ளி, தேன்மொழி (கவிதை இதழ், அறிவுக்களஞ்சியம் முதலான இதழ்கள் அவைவெளி வந்த காலத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டவை. இவ்விதழ்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் சிறப்பியல்புகளைக் கொண்டவையாகக் காணப்பட்டன. கவிதைக்கெனவெளிவந்த தேன்மொழி இந்த வகையிலே விதந்து குறிப்பிடப்படவேண்டியது.

19ஆம் நூற்றாண்டிலே ஈழத்தில் அச்சியந்திரசாலைகளை நிறுவிய சுதேசிகளிற் பெரும்பாலானவர்கள் தமிழ்மொழி, இலக்கிய இலக்கணங்களில் அறிவும் ஆற்றலும் ஆர்வமும் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். இந்தவகையிலே வரதரும் அச்சககாரராகவும் பதிப்பாளராகவும் தம்மை நிலை நிறுத்திக் கொண்டார். அச்சுஇயந்திரப் பயன்பாட்டை அச்சுத்தொழிலாகக்கருதாது. அச்சுக் கலையாகப் பயன்படுத்தும் மனநிலையைக் கொண்டிருந்தார். இதனால் இவரது பதிப்புக்கள் சிறப்புற அமைந்தன.



இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க. கைலாசபதி, மகாகவி, முருகையன், வித்துவான் பொன். முத்துக்குமாரன், செங்கையாழியான், கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை, சொக்கன், சோமகாந்தன், சாந்தன் முதலான் புகழ்பெற்ற அறிஞர்களின் நூல்களைப் பதிப்பித்த பெருமை இவரைச்சாரும். எழுத்தாளர்களை அரவணைத்து ஊக்கமளித்து உதவும் மனப்பாங்குடையவர். எழுத்தாளர்களை ஊக்குவித்து உடனுக்குடன், எரியும் பிரச்சினைகளை நூலாகக்சிருஷ்டிக்க வழிகாட்டுபவர். இந்தவகையிலே 'நீலவண்ணன்' (செங்கையாழியான்) எழுதிய 24 மணிநேரம், 12 மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது. முதலான நூல்கள் வெளிவர உந்துவிசையாக அமைந்தவர் இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே வரதருக்குரிய முக்கியத்துவம் மூன்று அமிசங்களிலே முதன்மை பெறுகின்றது என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவார். அவையாவன:

- ஈழத்துச் சிறுகதையாசிரியர்களுள் முக்கியமான ஒருவர்.
- ஈழத்து நவீனதமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு முக்கியமான நிறுவனமாக விளங்கும் மறுமலர்ச்சி இயக்கத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களுள் ஒருவர்.
- ஈழத்தமிழ் இலக்கியத்தின் முக்கியபிரசுரகர்த்தருள் ஒருவர்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக 'ஆன்றவிந்தடங்கிய சான்றோ'னாக வாழும் வரதர் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும்மென வாழ்த்தி வணங்குவோமாக.

யாழ். பல்கலைக்கழகம் – ***கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா***

06-03-2002





# வாழ்நாளினை நீட்டிடும் வல்லமை படைத்த வரதர்

*– சொக்கன்*

சென்ற நூற்றாண்டின் நான்காவது தசாப்தம். எனக்கும் என் உற்ற நண்பர்களான (மதுரகவி) நாகராஜனுக்கும், சோ. இராமச்சந்திர ஐயருக்கும் 'கால் முளைத்த காலம்' அது. இராமச்சந்திர ஐயருக்குப் பள்ளிப் படிப்போடு, கோயிற் பூசைகளும் இருந்தமையால், எங்கள் சுற்றுலாவிலே அவர் ஆசை அருமையாகத்தான் கலந்து கொள்வார். அந்தக் காலத்தில் வேட்டியைத் தூக்கிச் சண்டிக்கட்டாய்க் கட்டியபடி, எங்கே எதற்கோ மிக அவரசமாகச் செல்வபர்போல விடுவிடுவென்று நடந்துசென்ற இரு பொடிப்பயல்களுகு யாழ்ப்பாணத்து மூலை முடுக்குகளெல்லாம் பரிச்சயமாய் இருந்ததில் வியப்பில்லை.

'நாய்க்கு வேலை இல்லை; நடக்க நேரமும் இல்லை' என்ற கதைதான் எங்கள் கதை. ஆனால் இடையிடையே ஓய்வெடுக்கும் வகையில் வாசகசாலைகளிலே தரித்திருந்து அங்குள்ள பத்திரிகைகள் சஞ்சிகைகளை மேய்வதற்கும் தவறுவதில்லை. இந்த மேய்ச்சலும், இயல்பாகவே இருந்த, வயதுக்கும் அப்பாலான வெம்பற் கனவுகளும், கற்பனைகளும் எழுத்துலகில் புகவேண்டும் என்ற ஆர்வத்தையும், எழுத்தாளர் என்றால் - புதுமைப் பித்தனின் வார்த்தையும், வார்த்தையிலே சொல்வதானால் - 'வானத்தமரர்கள்' என்ற எண்ணத்தையும் எம்மில் ஏற்படுத்தவும் தவறவில்லை.

1946 என்று நினைக்கிறேன். தமிழ் எஸ்.எஸ்.ஸி. பரீட்சைக்குத்தோற்றிவிட்டு, சும்மா திரிந்து சுகம் அனுபவித்த காலம் அது. எங்கள் நடராச பவனியின்போது, மெல்லிய, ஒடுங்கிய முகம் உடைய, நாஷனல் தரித்த, அலுவலகப்பை தாங்கிய இளைஞர் ஒருவர் முட்டாஸ் கடைச்சந்தியிலே திரும்பி, காங்கேசன்துறை வீதியால் நடந்து செல்வதை அடிக்கடி காண நேர்ந்தது. 'இவர் யார்' என்ற வினாவைக்கிளப்பித் துப்பறியும் முயற்சியில் இறங்கினோம். துப்புத்துலங்கியபோது எங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.



இவர்தாம் 'வரதர்' என்ற புனை பெயர் கொண்ட (அந்நாளிலேயே பிரபலம் பெற்றுவிட்ட) வரதராசன் என்றும், 'மறுமலர்ச்சி' சஞ்சிகையின் இணையாசிரியர் என்றும் அறிந்து கொண்டு, அவரைத் தொடர்ந்து நடந்து சென்று, ஆசுப்பத்திரி வீதியிலே அக்காலத்தில் இயங்கிவந்த பார்வதி அச்சகத்துள் அவர் செல்வதைக்கண்டு, அந்த இடத்திலேயே நின்று அவரின் செயற்பாடுகளை அவதானிக்கத் தொடங்கினோம். ஒரு நாள் அல்ல, பலநாள்கள். அச்சக முகப்பிலே, மேசையொன்றின் அருகில் அமர்ந்து அவர் விறுவிறு என்று எழுதுவது, அவ்வப்போது உள்ளே சென்று அச்சுக் கோத்த தாள்களை எடுத்து வந்து திருத்துவது எல்லாம் எங்களுக்குப் புதுமையாயிருந்தன. எழுத்தாளர் என்றால் மெலிந்தவராயும், நாஷனல் சட்டை அணிந்தவராயும், அலுவலகப் கைப்பையை தாங்கி விடுவிடு என்று நடப்பவராயும் இருப்பது மட்டுமில்லை; மேசை அருகில் அமர்ந்து தமது கற்பனைகளை எழுதுகோலால் மடைமாற்றம் செய்பவர் என்றும், சரவை (Proof) திருத்துபவரென்றும் நாம் முடிவுகட்டினோம். ஆனாலும் எங்கள் கூச்சம், தயக்கம், தாழ்வு மனப்பான்மை என்பன அவரை அணுகி உரையாட வாய்ப்பளிக்கவில்லை. ஏதோ அசட்டுத்தணிச்சலோடு நான் 'மறுமலர்ச்சி'க்கு அனுப்பிவைத்த உரைச்சித்திரம் (குப்பையிலே மாணிக்கம்) ஒன்றும், சிறுகதை ஒன்றும் (மின்னுவதெல்லாம்.. என்பது நான் அளித்த தலைப்பு - பொன்பூச்சு) மறுமலர்ச்சியில் வெளிவந்தபொழுது சற்றுத் துணிவும், எனக்கும் எழுத்தாளர் என்ற அங்கீகாரத்தை வரதர் வழங்கிவிட்டார் என்ற நன்றியுணர்வும் ஏற்பட்டன.

காதலே கதைக்கு ஊற்றுக்கால் என்றிருந்த அந்தக்கால கட்டத்தில் வரதர் எழுதிய 'வென்றுவிட்டாயடி இரத்தினா', 'உணர்ச்சி ஓட்டம்' ஆகியகாதற்கதைகள் என்னை மிகுதியும் கவர்ந்தன. கதைகளிலே வந்த கடிதங்களில்,'வணக்கம்' (அது அக்காலத்தில் பெருவழக்கில்லை) என்பதற்குப் பதில் அவர் இட்டுவந்த 'வந்தனம்' எனக்கு வழிகாட்டியாயிற்று. நான் எழுதிய கடிதங்களில் 'வந்தனம்' என்ற வார்த்தைப் பிரயோகத்தை நான் தவறாது கையாண்டது வரதரைப் பின்பற்றியே! இதன் மூலம் நான் சொல்ல நினைப்பது என்னவெனில் அன்று வரதரில் நான் கொண்டிருந்த வீரவணக்கத்தினைப் (Hero worship) புலப்படுத்தத்தான்.

வரதர் மறுமலர்ச்சியில் கவிதைகள் எழுதியதும் உண்டு. அக்காலத்தில் எனக்குக் கவிதைகளில் ஈடுபாடில்லை. ஆனால் நாகராஜன், வரதரின் கவிதைகளை நயந்து கூறிப் பரவசமடைந்த நாள்கள் என் நினைவிலே பசுமையாய் உள்ளன. அவர் கவிதையிலே நயங்கண்டு 'பிதற்ற'; நான் வரதரின் கதாபாத்திரங்களின் சிறப்பையும் அவரின் உரைநடைச் சிறப்பையும் உளறிக்கொட்ட எங்கள் நாள்கள் இன்பமாகக் கழிந்தன. தமது பதினெட்டாவது வயதிலேயே 'நாவலர்கோன்' வரலாற்றை நூலாக்கி வெளியிட்ட அவரின் துணிவும், அதில் அவர்கையாண்ட நடைச்சிறப்பும் அக்காலத்தில் நாகராசன், இராமச்சந்திர ஐயர், த. இராஜகோபாலன் (மறுமலர்ச்சி இதழில் புரட்சிதாசன் என்ற புனைப்பெயரில் தமிழின் மறுமலர்ச்சிக்கட்டுரை எழுதியவர், எனது ஆரம்ப கால இலக்கிய முயற்சிகளை நெறிப்படுத்தியவர்) ஆகியோரோடு கலந்துரையாடும் பொழுது இடம்பெற்ற முக்கிய விடயங்களாகும்.

இன்று நான் பொடிப்பயல் அல்லன். எனினும் ஆறு வயது மூத்தவரான வரதரும் இளைஞர் அல்லர். நான் மூத்துவிட்டேன். அவர் மூப்போட (மன, அறிவு) முதிர்ச்சியும் அடைந்துவிட்டார். எழுத்தோடு நில்லாது, பத்திரிகைகளின், சஞ்சிகைகளின் ஆசிரியராய், பலகுறிப்பு, நாள்காட்டி என்று முன்னோடி முனைப்பராய், அச்சக உரிமையாளராய் விளங்கி அவர் பெற்றுள்ள அனுபவங்களும், அந்த அனுபவங்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழிகாட்டிய வகைகளும் எம்மவர் நன்றியோடு நினைவு கூரத்தக்கன.

'வீழ்நாள் படாஅமை நன்காற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங்கல்'

என்றார் வள்ளுவர். அவரின் பொன்மொழிக்கேற்பத் தமது வாழ்நாள்களை வீழ்நாள்களாக்காது, எழுபத்தைந்து வயதிலும் அயராது பணியாற்றிவரும் வரதரின் வாழ்நாள் வீழாது முடிவின்றி நீண்ட கொண்டேயிருக்கும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை.

வாழ்க வரதர்!



# பாராட்டுக்குரிய வரதர்

– *'சிற்பி'*

அரை நூற்றாண்டுக்கு மேலாக நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்புச் செய்துவருபவர் வரதர். சிறுகதை, கட்டுரை, பத்திரிகைத் துறைகளில் அவர் ஆற்றிவரும் சேவை - வாசகர்கள் எழுத்தாளர்கள், விமர்சகர்கள், இலக்கிய வரலாற்றாசிரியர்கள் முதலியவர்களின் கணிப்பையும் கௌரவத்தையும் பெற்றுள்ளது.

எளிமையான சொற்கள், சிக்கலற்ற, தெளிவான வசனங்கள், புதிய பார்வை, புதுமையான கருத்துக்கள் வாசகர்களை விரைவிற் கவர்ந்திழுக்கின்ற கதை சொல்லும் பாணி, அவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதோருங்கூட "நல்ல கலைப் படைப்பு" எனப் பாராட்டும் சய்நேர்த்தி - வரதருடைய கதைகளில் இவை என்றுமே நிறைந்திருக்கும்.

இந்நாட்டு மக்களின் பிரச்சினைகளை, வாழ்க்கை முறைகளை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புக்களை அந்த மக்களின் மொழியிலேயே கலாபூர்வமாகசித்திரிக்கும் சிறந்த சிறுகதைகள் பற்றிச் சிந்திக்கும் நடுவு நிலை விமர்சகர்களின் கவனத்தை இவருடைய "வாத்தியார் அழுதார்", "பிள்ளையார் கொடுத்தார்", "கற்பு" முதலிய பல கதைகள் கவரும் என்பது உறுதி.

பள்ளி மாணவனாக இருந்த போது இவர் எழுதி வெளியிட்ட "நாவலர் கோன்", யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ்மன்னன் சம்பந்தமான "வாழ்க நீ சங்கிலி மன்ன", பாரதக் கதை, யாழ்ப்பாணத்தார் கண்ணீர், சமீபத்தில் வெளியான "மலரும் நினைவுகள்" ஆகிய நூல்கள், மறுமலர்ச்சி, வெள்ளி, தேன்மொழி, ஆனந்தன், புதினம், அறிவுக்களஞ்சியம், சஞ்சிகைகளில் எழுதிய ஆசிரியத் தலையங்கங்கள், அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் எல்லாம் இவர் சிறந்த ஒரு கட்டுரை ஆசிரியர் என்பதற்குச் சான்றாக மிளிர்கின்றன.





எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமானலும் வரதர் அதைச் சொல்லும்போது அதில் ஒரு புதிய சுவை இருக்கும். சொல்பவற்றைச் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் சுவையாகவும் சொல்லும் திறனை, கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பற்றிய மதிப்பீட்டிற் காணலாம்.

"தமது இளமைக் காலத்தில் அவர் பாடுபட்டுப் படித்துப் பரீட்சை எழுதிப் பெற்ற 'பண்டிதர்' பட்டம் இப்போது காணாமற்போகிற அளவுக்கு, இன்று பட்டங்கள் அவரை தேடித் தேடி வழிகேட்டு வருகின்றன. ஏற்கனவே மக்களிடம் பழகிவிட்ட 'சிவத்தமிழ்ச் செல்வி', "துர்க்கா துரந்தரி" என்று, சொன்னாலே போதும், ஒரு அறிவார்ந்த, மதிப்புக்குரிய திருவாட்டியின் உருவம் மக்கள் மனங்களில் தோன்றிவிடுமளவுக்கு அவர் உயர்ந்து நிற்கிறார்.

ஒரு சாதாரண குடும்பத்திற் பிறந்த. ஒரு சாதாரண ஆசிரியையாகிய தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இப்படி உயர்ந்து நிற்பதற்கு என்ன காரணம்? அவரைக் கேட்டால் "எல்லாம் அந்த அம்பாள் கொடுத்தபிச்சை" என்ற தன்னடக்கத்துடன் கூறுவார்.

அவ்வளவுதானா?

"தீதும் நன்று பிறர்தர வாரா" என்று சங்கப் புலவன் சொன்ன வார்த்தைகளிலே எனக்கு நிறைவான நம்பிக்கை உண்டு.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சிறப்புகள் யாவும் அவராலேயே தேடித் தேடிப் பெற்றுக் கொள்ளப்பட்டவை. தேடித் தேடிக் கல்விச் செல்வத்தைத் தனக்குள்ளே சேர்த்துக் கொண்ட திறமை, கற்ற கல்வியின் பயனாக நல்ல வழிகளிலே சிந்தித்துச் சிந்தித்துச் செயலாற்றிவரும் திறமை, தனக்குக் கிடைத்த கல்விச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும், மக்களுக்காக - தேவைப்பட்ட மக்களுக்காகச் செலவிட்டு வரும் மனித நேயம் -

இந்தச் சிறப்பான - ஆளுமைகள்தான் சிவத்தமிழ்ச் செல்வியை உயர்த்தி வருகின்றன. (அறிவுக்களஞ்சியம் இல 37)



பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அதிக அளவிலே "புதுக்கவிதைகள்" இன்று இடம் பெறுகின்றன. தமிழில் முதன் முதலிற் புதுக்கவிதையை எழுதியவர் மகாகவி பாரதியார் என்பது சிலருடைய கருத்து. பார்க்கும் போது வசனத்தின் சாயலையும் படிக்கும்போது கவிதையின் துடிப்பையும் மிடுக்கையும் கொண்ட புதிய ஓர் இலக்கிய வடிவத்தை உருவாக்கி அதற்கு "வசன கவிதை" எனப் பெயரிட்டவர் பாரதியார். ஞாயிறு, சக்தி, காற்று, கடல் போன்ற தலைப்புகளிற் பாரதியார் எழுதிய வசன கவிதைகள், இலக்கிய இரசிகர்களுக்கு விருந்தாகும் தத்துவசிந்தனைகள்.

பாரதியாரைப் பின்பற்றி இலங்கையில் முதன் முதலில் வசன கவிதையை உருவாக்கிய முன்னோடி என்ற பெருமை வரதருக்கும் உண்டு. "ஈழகேசரி (13-06-1943) இல் வெளியாகிய, "மறுமலர்ச்சி" (இதழ் 25, மே 1999) இல் மறுபிரசுரமான "ஓர் இரவிலே" என்பது வரதருடைய சிறந்த வசன கவிதைகளுள் ஒன்று.

வரதர் அவர்களை இணை ஆசிரியராக கொண்டு 1946 - 1948 காலப்பகுதியில் வெளியான "மறுமலர்ச்சி" சஞ்சிகையின் இலக்கியப் பணி, ஐம்பது அண்டுகள் கழிந்த பின்னர் இன்றும் பலரால் விதந்துரைக்கப்படுகின்றது. அக்காலத்தில் தென்னிந்தியாவில் வெளியாகிய இலக்கிய உலகில் முத்திரை பதித்த 'மணிக்கொடி'யுடன் இச் சஞ்சிகையைப் பலர் ஒப்பிட்டுப் பாராட்டுவர். ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்துக்கு வலிமையும் வனப்பும் சேர்க்கும் ஆற்றலுடைய புதிய எழுத்தாளர் பலரை உருவாக்கி உற்சாகமூட்டி வளர்க்கும் பணியை "மறுமலர்ச்சி" மூலம் செய்தவர் வரதர். இந்நாட்டின் எத்தாளருள் இரண்டாவது பரம்பரையினர் எனச் சுட்டப்படுவோருட் கணிசமானோர் "மறுமலர்ச்சி" எழுத்தாளர் குழுவினரே. ஆக்க இலக்கியகர்த்தாக்களின் உருவப் படங்களை அட்டையில் வெளியிட்டுக் கௌரவிக்கும் பணியை முதன் முதலிற் தொடங்கியவர் வரதர் என்பதும் குறிக்கத்தக்க ஒன்று.

"மறுமலர்ச்சி"க்குப் பின்னர் "ஆனந்தன்", "தேன்மொழி" ஆகிய இலக்கிய சஞ்சிகைகளை இவர் வெளியிட்டார். புதினம், வெள்ளி, அறிவுக்களஞ்சியம்' ஆகியவை இலக்கியத்துடன் வேறும்

பல சுவையான அறிவார்ந்த அம்சங்களுடன் வெளிவந்தன. புதிதாக புதுமையாக எதையாவது செய்யவேண்டும் என்ற இவருடைய ஆர்வத்தையும் பிரதி பலித்தன.

தான் கொண்டிருக்கும் துறைகளிலெல்லாம் தன் தனித்தன்மைகளைக் காத்துக் கம்பீரமாக நிற்கும் வரதர், சமீபத்தில் எழுதிய நாவல் "காவோலையில் பசுமை" கொழும்பு "தினகரன்" ஞாயிறு இதழில் தொடர்கதையாக வந்து, விரைவில் நூலுருப் பெறவுள்ளது. முன்னர் வெளியான இவரது "மறுமலர்ச்சி"யில், "உணர்ச்சி ஓட்டம்" "வென்று விட்டாயடி ரத்தினா", "தையலம்மா" முதலிய குறு நாவல்களையும் எழுதியிருந்தார். தன்னையும் வாசகர்கள் சிலரையும் கதாபாத்திரங்களுடன் இணைந்து உரையாட வைத்து வாசிப்போரின் ஆவலைக் கிளறி, உண்மையில் நடந்த சம்பவங்களா? கற்பனையா? என இலகுவிற் பகுத்தறியமுடியாதபடி கதையைச் சுவையாக வளர்ந்திருந்தார் வரதர். ஆனால் அந்த நாவல்கள் நூலுருப் பெறவில்லை. அவையெல்லாம் விரைவில் நூலுருப்பெற்று வரதர் புகழ் சேர்க்குமென நம்புகிறேன்.

ஈழத்து இலக்கிய உலகில் சாதனைகள் பல புரிந்து, தமது வாழ்வில் பவளவிழாவையும் கண்டுவிட்ட வரதரை வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

"கணவன் எப்படித்தான் கொடுமைப்படுத்தினாலும் அவற்றையெல்லாம் பொறுத்து வாழ்வதே பெண்ணின் பெருமை" என்று இந்தப் படிப்பு இன்னும் பல நாட்களுக்கு நின்று பிடிக்காதென்றே நினைக்கிறேன். உலகெங்கும் பெண்ணியல் வாதமும் பகுத்தறிவு வாதமும் தலைதூக்கியிருக்கிறது. நமது தமிழீழப் பெண்கள், தமிழ் கூறும் நல்லுலகுக்கு மட்டுமன்றி, உலகம் முழுவதுக்குமே வழிகாட்டிகளாக நெஞ்சில் உரமும் நேர் கொண்ட பார்வையும் கொண்டவராய்க் கைகளில் துப்பாக்கி ஏந்தியிருக்கிறார்கள்!.

ஈழத்தமிழகம் பெருமைப் படலாம்!

- (வரதர்) மலரும் நினைவுகள்



# மறுமலர்ச்சி வரதர்

*– மயிலங்கூடலூர், பி. நடராசன்*

'வரதர்' (தி.ச.வரதாரசன்) என்றதும் 'மறுமலர்ச்சி' இதழும், 'மறுமலர்ச்சி' என்றதும் 'வரதர்' பெயரும் நினைவுக்கு வரும். மறுமலர்ச்சி இதழ் மட்டுமன்றி ஆனந்தன், தேன்மொழி, புதினம், வெள்ளி, அறிவுக்களஞ்சியம் முதலிய இதழ்களும் நினைவுக்கு வரும் இவையெல்லாம் வரதரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இதழ்கள். இளமையிலே கையெழுத்து இதழ்களையும் வெளியிட்டு வந்திருக்கிறார். மிக இளமையிலே பிறந்து வளர்ந்த இடமாகிய பொன்னாலையில் இருந்த சமூகத்தொண்டுச் சங்கம் வெளியிட்ட 'சமூகத்தொண்டன்' கையெழுத்து இதழின் ஆசிரியராக வரதர் இருந்தார். அவர் மாணவராயிருந்த மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் மாணவர் தேர்ச்சி சங்கம் வெளியிட்ட கையெழுத்து இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அது மட்டுமன்றிக் கையெழுத்து இதழ்களின் ஓவியராகவும் விளங்கினார்.

ஆயிரத்துத் தொழாயிரத்து நாற்பதுகளின் தொடக்கத்தில். இளம் எழுத்தாளர்களின் சங்கம் ஒன்றை உருவாக்க வரதர் அழைப்பை விடுத்தார். அதற்கு 'புதுமைப் பித்தர்கள் சங்கம்' என்று பெயரிட விரும்பினார். சங்கக் கூட்டத்தில் இப்பெயரை முன்மொழிந்தபோது பலரும் அதனை விரும்பவில்லை. 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி சங்கம்' என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டது. வரதர் அவர்களே சங்கத்தின் கையெழுத்து இதழுக்கு ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வரதர் சிறப்பாக மறுமலர்ச்சி என்ற அந்தக் கையெழுத்து இதழை வெளியிட்டுக் கொண்டிருந்தார். சங்க உறுப்பினர்கள் அதனை மாறிப் மாறிப் படித்துக்கொண்டிருந்தனர். வரதர் அதனை அச்சுப் பதிவு இதழாக வெளியிட வேண்டும் என விரும்பினார். வரதர், க.கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன், பண்டிதர்





ச. பஞ்சாட்சரசர்மா, க.இ.குமாரசாமி ஆகிய ஐவரும், ஐம்பது ரூபா வீதம் முற்பணமிட்டு வரதரின் பொறுப்பில் மறுமலர்ச்சி முதல் இதழை அச்சிட்டனர். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்க உறுப்பினர் இருவர் இதனை எதிர்த்து நீதிமன்றத்திலே வழக்கைத் தாக்கல் செய்தனர். இதழை வெளியிடக்கூடாது என்று தடை உத்தரவும் போடப்பட்டது. சங்க உறுப்பினர்களுள் ஒருவரான நாவற்குழியூர் க. செ.நடராசன் ஒரு சட்டத்தரணியை ஒழுங்க செய்து நீதி மன்றில் நிலைமையை விளக்கிக் கூறி இதழ்களை மீட்டுக் கொடுத்தார். நூற்றிருபத்தைந்து ரூபா செலவில் 500 பிரதிகள் அச்சிடப்பட்டன. இம் முயற்சி தொடர்ந்தது இருபத்துநான்கு மறுமலர்ச்சி இதழ்கள் வெளிவந்தன.

1943ஆம் ஆண்டு யூன் மாதம் 13ஆம் திகதி தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் தொடங்கப்பட்டது. கையெழுத்து இதழாக வெளிவந்த மறுமலர்ச்சியின் கையெழுத்து இதழைத் தொடர்ந்து முதல் அச்சு இதழ் 1946ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் வெளியிடப்பட்டது. 1948ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரை மறுமலர்ச்சி இதழ்கள் வெளியிடப்பட்டன. முதலில் அ.செ.முருகானந்தனும் பின்னர் ச. பஞ்சாட்சரசர்மாவும் மறுமலர்ச்சி இதழின் இணையாசிரியர்களாக வரதருடன் பணியாற்றினர்.

வரதர், நாவற்குழியூர் நடராசன், பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா, க.இ.சரவணமுத்து (கவிஞர் சாரதா), அ. செ. முருகானந்தன், அ.ந.கந்தசாமி, மகாகவி து. உருத்திரமூர்த்தி, சு.வே. (சு.வேலுப்பிள்ளை), சொக்கன் (க.சொக்கலிங்கம்), சோ. தியாகராசா (சோதி), சு. இராசநாயகன், கு. பெரியதம்பி, க.சி.குலரத்தினம் முதலியோர் மறுமலர்ச்சியின் முக்கிய எழுத்தாளர்களாக இருந்தனர்.

மறுமலர்ச்சிச் சங்கத்தில் பல எழுத்தாளர்கள் உறுப்பினர்களாக இருந்து மறுமலர்ச்சி இதழை வெளியிடத் துணைசெய்த போதிலும் வரதர் அவர்களே மறுமலர்ச்சி புகழ்பெற்ற இதழாக வெளிவரப் பெரும் பணியாற்றினார். இது பற்றி அவர் பின்வருமாறு கூறுகின்றார்.



"தமிழில் புதிய இலக்கியம் முளைகொண்டு வளரத் தொடங்கிய காலத்தில். யாழ்ப்பாணத்திலிருந்து மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையை நண்பர்களுடன் சேர்ந்து நடத்தியமை குறித்து இப்போது நான் நல்ல மனநிறைவு அடைகிறேன் - பெருமைப்படுகிறேன்.

(மல்லிகை வெள்ளி விழா மலர், 'மறுமலர்ச்சியும் நானும்' ஜனவரி 1990 ப.28)

தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் செயற்பட்டு வந்தது. மறுமலர்ச்சி இதழ் மூன்றாண்டுகள் கையெழுத்து இதழாகவும் மூன்றாண்டுகள் அச்சு இதழாகவும் வெளிவந்தது. ஆறு ஆண்டுகள் சங்கமும் இதழும் இலக்கியப் பணியாற்றி வந்தன. இக்காலத்தை இலக்கிய வரலாற்றில் 'மறுமலர்ச்சிக்காலம்' எனலாம். ஈழகேசரியில் எழுதத் தொடங்கிய எழுத்தாளர்கள் மறுமலர்ச்சியில் தீவிர சிறுகதை எழுத்தாளர்களாகவும் கவிஞர்களாகவும் விளங்கினர். எனவே இக்கால எழுத்தாளர்கள் 'மறுமலர்ச்சி எழுத்தாளர்கள்' என அழைக்கப்படுகின்றனர்.

செங்கை ஆழியான் க. குணராசா மறுமலர்ச்சியின் இருபத்து நான்கு இதழ்களில் வெளியான 52 சிறுகதைகளில் 25 சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து 'மறுமலர்ச்சிக் கதைகள்' என்ற தொகுப்பாக வெளியிட்டுள்ளார். இவ்வாறே மறுமலர்ச்சியில் வெளிவந்த கவிதைகளையும் ஒரு தொகுதியாக வெளியிடவேண்டும். அதன் மூலம்மறுமலர்ச்சிக் காலத்தின் தனித்துவம் புலப்படும்.

# இரசிகர் மனவயலில் பூத்திருக்கும் வரதர்

*– கோகிலா மகேந்திரன்*

"என் தாளெல்லாம் எழுத்தே. எழுத்துக்கே என் ஆவிகுன்றாது காண், ஏதெவர் கூறிடினும் என் மூச்சு, என்று எழுத்துக்கே அடி பணிந்து, இன்று நலமான முதுமையில் வாழ்பவர் வரதர் ஐயா அவர்கள்.

உயர்வான தோற்றம், உடலில் மட்டுமல்ல, அவர் உள்ளத்திலுந்தான்.

தூண்டாமணி நற்றீபம் போலச் செல்லும் ஒளி அவர் முகத்தில் மட்டுமல்ல, எழுத்திலுந்தான்!

"கரத்தின் விரைவை மனம் முந்தக்
கருத்தின் விரைவோ அதை முந்தக்"

கதைகள் பல செய்த வரதர் ஐயாவுக்குப் பவளவிழா வருவது மிகவும் பொருத்தமானது.

முகத்திலே பெரும் மீசை - ஆனால் உளத்திலோ மிகமென்மை. இதனால் எத்தனையோ இரசிகர் மனவயல்களில் நிறைந்து பூத்திருக்கிறார் வரதர்.

ஒரு மனிதனுடைய சிறப்பு என்பது அவரது தனி ஆளுமையே. இந்தப் பரந்த பூமியில் அவன்வேறு யாரைப் போலவும் இல்லாமல். தனி இயல்புகளுடன் காணப்படுகின்றான். இயற்கையின் விசைகளிடையே அவன் பண்புகளுடன் ஆக்கப்பட்டிருக்கிறான் அல்லது ஆகியிருக்கிறான். மற்றைய மனிதர்களுடன் சேர்ந்தும் பிரிந்தும் தன் வாழ்வு எல்லைக்குரிய ஒரு காலப்பகுதியிலே தனக்கேயுரிய விசேஷ தன்மைகளுடன் அவன் வாழுகின்றான். வரதர் அவர்களின் வாழ்வும் தனித்தன்மை வாய்ந்தது. அந்த வாழ்வின் சிறப்பை அவர் வாழும் காலத்திலேயே பதிவு செய்வது வரவேற்கத்தக்கது.

செந்தண்மையாளரான ஐயா அவர்களின் பவளவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்வு அடைகிறேன்.



# வரதருக்கு என் வாழ்த்துக்கள்

*– அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை*

வரதர் என்ற புனைபெயரில் எழுத்துலகுக்கு அறிமுகமாகியுள்ள தி.ச.வரதராசன், இயல்பாகவே இலக்கிய ஆர்வம் நிரம்பப் பெற்றவர். இளம் வயதிலேயே பல சிறுகதைகளை எழுதிவிட்டவர். ஈழத்துப் புதுக்கவிதையாளர்களின் முன்னோடி. 1946ஆம் ஆண்டு 'மறுமலர்ச்சி' என்ற இலக்கிய சஞ்சிகையை ஆரம்பித்து சிறிது காலம் நடத்தினார். பல புதிய எழுத்தாளர் தோன்றுவதற்கு அது களம் அமைத்தது. வரதரது சிறுகதைகள் கயமை மயக்கம் 'வரதர் கதைகள்' என்ற பெயரில் தொகுதியாக வெளிவந்திருக்கின்றது.

இவர் ஒரு வெளியீட்டாளரும் கூட. பல நூல்களை வெளியிட்டு ஈழத்தமிழ் இலக்கியத்திற்கு அணியும் பெருமையும் சேர்த்துள்ளார்.

பெருமை இல்லாதவர். பழகுவதற்கு இனியவர். இந்த வயதிலும் இலக்கிய ஆர்வம் சற்றும் குன்றாதவர். ஒரு இலக்கியக் கூட்டத்தையும் தவறவிடமாட்டார்.

வரதர் நீண்டகாலம் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்ய, இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

# "மறுமலர்ச்சி" வரதர்

*– நா. சோமகாந்தன்*

புதிய தலைமுறை எழுத்தாளர்களில் அநேகமானவர்கள் மூத்த எழுத்தாளர் வரதரைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்க மாட்டார்கள். அது அவர்களின் குற்றமல்ல. அண்மைக் காலத்தில் எமது தேசியப் பத்திரிகைகளில் அவரின் எழுத்துக்கள் எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. கைலாசபதி தினகரனில் ஆசிரியராக இருந்தபோது வரதரை வலிந்து எழுதவைத்துப் பிரசுரித்தார். "வண்ணமலர்" என்ற புதுமையான தொடர்கதை 1960இல் தினகரனில் வெளிவந்தது. அதன் முதல் அத்தியாயத்தை மூத்த எழுத்தாளர் வரதர் தொடக்கி வைக்க; அடுத்த அத்தியாயங்களை அக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த கே. டானியல், பத்மா சோமகாந்தன், காவலூர் ராசதுரை, உதயணன், ஈழத்துச் சோமு, என். கே. ரகுநாதன் ஆகியோர் எழுதியதாக ஞாபகம்.

தேசியப் பத்திரிகைகளில் எழுதாததால் வரதர் எழுதாமல் ஓய்ந்து இருந்துவிட்டார் என்று அர்த்தமல்ல. 30களின் பிற்பகுதியில் "ஈழகேசரி" வெளியிட்டுக் கொண்டிருந்த "கல்வி அனுபந்த மலர்" வெளியீட்டில் தனது பள்ளிப் பருவத்தில் 14வது வயதில் எழுதத் தொடங்கிய வரதர். சென்ற ஆண்டிறுதி வரை வெளிவந்த "அறிவுக் களஞ்சியம்" மாணவர் மாத இதழின் ஆசிரியத் தலையங்கம் வரை பலவகையான ஆக்கங்களை அவ்வப்போது எழுதிக் கொண்டு வந்திருக்கிறார். எழுத்துலகில் முத்திரை பதித்த எழுத்தாளர் வரதரின் எழுத்துப் பணியின் மணி ஆண்டு 1996 ஜூலை முதலாம் தேதி நிறைகின்றது. ஈழத்து இலக்கிய உலகத்தினால் நன்றியோடும் மகிழவோடும், பெருமையோடும் கொண்டாடப்பட வேண்டிய நாள் அது!.

தமிழ்நாட்டின் இலக்கிய வளர்ச்சிப் பாதையில் "மணிகொடி" ஒரு திருப்புமுனை, அந்தப் பண்ணையில் வளர்ந்தவர்கள் தாமே எனக் கூறிக்கொள்வதிலும் அண்மைக் காலம் வரை அங்கு பெரும் போட்டி. அதனால் மணிக்கொடி காலகட்டத்தைப் பற்றி அங்கேயுள்ளவர்கள் அடிக்கடி அழுத்தி சொல்லி, இலக்கியத்தில் அது ஒரு பொற்காலம் போன்றதொரு மாயையே உண்டாக்கிவிட்டனர்.



மரபுப்பாதையில் சுவடு பதித்துப் போய்க்கொண்டிருந்த எமது ஈழத்துச் இலக்கியப் போக்கையே திசை திருப்பிவிட்ட சாதனையைச் செய்தவர்கள் "மறுமலர்ச்சிக்" குழாத்தினரே!

ஈழகேசரி மாணவர் மலரில் அக்காலத்தில் எழுதிக் கொண்டிருந்த வரதர், அ.செ.முருகாந்தன், அ. ந. கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன், மஹாகவி என்ற ருத்திரமூர்த்தி, பஞ்சாட்சர சர்மா. கனகசெந்தில்நாதன் முதலியோர் மறுமலர்ச்சி இலக்கியச் சங்கத்தை அமைத்து மறுமலர்ச்சி என்ற முதலாவது இலக்கியச் சஞ்சிகையையும் வெளியிட அச்சாணியாக விளங்கியவர் வரதர் அவர்களே! புதுமை இலக்கிய வேட்கையும், இளம்வயசில் பெற்ற அச்சுக்கலை அனுபவமும் அவருக்கு தூண்டுகோலாயமைந்தன.

சுமார் மூன்று ஆண்டுகள் மட்டுமே வெளிவந்த மறுமலர்ச்சி இலக்கியமாசிகை, ஈழத்த புதிய சிறுகதை இலக்கிய முயற்சிகளுக்கு களமாக விளங்கியது. அதன் கருத்துக் களத்தில் புதுமையும் பழமையும் முட்டிமோதின. இலக்கியமும் கலையும் வெறும் சுவைப் பண்டங்களல்ல. சமூகப் பயன்பாடுடையவையாகவும் அமையவேண்டும் என்ற நோக்கம் மறுமலர்ச்சியில்தான் கருக்கட்டியது. தினகரனில் "சொக்கன்" எழுதிய சில கட்டுரைகளையும், மல்லிகை வெள்ளிவிழா மலரில் வரதர் எழுதிய ஒரு கட்டுரையையும் தவிர, மறுமலர்ச்சி பற்றிய கட்டுரைகளைக் காணோம். "மறுமலர்ச்சி" காலகட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி முழுமையானதொரு ஆய்வை, பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொண்டால் அது விரிவான ஈழத்து இலக்கிய வரலாற்றை எதிர்காலத் தலைமுறை அறிந்துகொள்ளத் துணையாக அமையும்.

புதுக்கவிதை என்று பேசப்படுவதற்கு பல காலத்துக்கு முன்னரே மறுமலர்ச்சியில் வரதர் இவ்வாறான சில கவிதைப் பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததை எத்தனை இலக்கியவாதிகள் அறிவர்?

வரதருக்கு சும்மா இருக்க முடியாது. புதிது புதிதாக எதைப் பற்றியாவது சிந்தித்தபடியே இருப்பார். சொல்லாமல் கொள்ளாமல் திடீரென அவற்றுக்குச் செயலுருவமும் கொடுத்துவிடுவார். உண்மையான

கலைஞனின் சுபாவமே அதுதான்! "வரதர் வெளியீடு" நிறுவனத்தை நிறுவி, அதனூடாக இலக்கியத்துக்கென புதிதாக ஒரு சஞ்சிகை. பெயர் "ஆனந்தன்". ஆசிரியர்; வரதர், கவிதைக்கென இன்னொரு சஞ்சிகை "தேன்மொழி." ஆசிரியர்: மகாகவி. (இலங்கையில் கவிதைக்கென வெளிவந்த முதலாவது சஞ்சிகை தேன்மொழி) ஆகியவற்றை வெளியிட்டார்.

**'வரதரின் பல குறிப்பு'**

ஒருவருக்குத் தேவையான சகல தகவல்களையும் கொண்டதாக லேக்ஹவுஸ் நிறுவனம் "பெர்குசன் டிறெக்டரி" என்ற பெரிய நூலை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறது. எல்லோருக்கும் பயன்படக்கூடிய சிறந்த உசாத்துணை நூல். பாடசாலைகள் , வர்த்தக நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்களில் அந்நூல் சிவத்த அட்டையோடு தவறாமல் இருக்கும். 800 பக்கங்களில் வெளிவந்த வரதரின் பலகுறிப்பு தமிழிலும் அப்படிச் செய்யமுடியும் என்பதை நிரூபித்தது. அதன் நிர்வாக ஆசிரியர்: வரதர், தொகுப்பாசிரியர்: சோமகாந்தன், மூன்று ஆண்டுகள் அடுத்தடுத்து இப்பெரிய நூலின் புதிய பதிப்புகளை 70களில் வெளியிட்டார்.

ஈழகேசரிக்குப் பிறகு, வாரப் பத்திரிகையொன்றை யாழ்ப்பாணத்திலிருந்து வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதற்கு வழிகாட்டியவர் வரதர். 60களின் தொடக்கத்தில் ஆரம்பித்து, இரண்டு ஆண்டுகள் வாராவாரம் சூடான அரசியல் செய்திகள், "சிரித்திரன்" சிவாஜியின் கார்டூன், சுவையான இலக்கிய அம்சங்களோடு வெளிவந்த பத்திரிகை "புதினம்". "இத்தால் சகலரும் அறிவது" என வாராவாரம் வரதர் எழுதிய தலையங்கம் சமூகச் சீர்கேடுகளுக்குச் சவுக்கடி கொடுத்தது. சிறுகதைத் துறையோடு இருந்த சோமகாந்தனை புதினத்தில் "களனி நதி தீரத்திலே..' என்ற புனை கதையை 16 வாரங்கள் தொடர்ந்து எழுத வைத்து, பின்னாளில் அவரை நாவல்துறைக்கும் இழுத்துவிட்டவர் வரதர்தான்.



வரதரின் மற்றொரு பத்திரிகை வெள்ளி. வாரந்தோறும் "வெள்ளி" வாசகர் கேள்விகளுக்கு வரதர் அள்ளிக் கொடுத்த பதில்களின் காரமும் சாரமும் தமிழ்வாணனுக்கு நிகரானவை. அட்டைப்படங்கள் வரைவதிலும் வல்லவர் என்பதை "வெள்ளி" பிரகாசப்படுத்தியது. அவர் வீட்டின் கூடத்திலுள்ள மகாத்மாகாந்தி, சாயிபாபா, தந்தை செல்வா, மற்றும் பாரதியார், இயற்கை காட்சிகள் எவரோ வரைந்தவையல்ல- அவரேதான்!

வரதரின் "கயமை மயக்கம்" தொகுதியிலுள்ள கதைகள் அத்தனையுமே முத்துக்கள். இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகளின் முன்வரிசை ஸ்தானத்தில் இன்றும் இருப்பவை. உருவத்திலுஞ்சரி, உள்ளடக்கத்திலும் சரி! பெண்நிலைவாதம் மற்றும் முற்போக்கு கருத்துக்கள் கலைநயத்தோடு அவற்றில் வெகு லாவகமாக கையாளப்பட்டுள்ளன.

பன்முக இலக்கிய பங்களிப்புகளை 60 ஆண்டுகளாகச் செய்த சாதனையாளரை அப்பணிகளின் மணி ஆண்டாகிய இப்போது நம் முன்னாலுள்ள இந்த மூத்த எழுத்தாளரை இப்படியே விட்டுப் போகிறோமா?

தினகரன் 28 - 04 - 96

திரு. சோமகாந்தன் அவர்களின் மேற்படி கட்டுரை தினகரனில் வெளியான பிறகு, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பிலே வரதருக்கு பெரிய பாராட்டு விழா ஒன்று எடுத்தது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற அவ் விழாவில் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களோடு தமிழகத்திலிருந்து வந்த 'வல்லிக்கண்ணன்' முதலியவர்களும் பங்குபற்றினர். கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் தலைமைவகித்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபாவஹினி கூட்டுத்தாபனம் ஆகியவைகளும் பத்திரிகைளும் நிகழ்ச்சிகளைக் கௌவிக் கொண்டன ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு இத்தனை பெரிய விழாவா என்று வியக்குமளவுக்கு அவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி கட்டுரையை எழுதிய திரு சோமகாந்தன் அவர்களே அவ்விழாவை முன்னின்று நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வரதர் என்கிற படைப்பாளி

*– செங்கைஆழியான்*

## 1. வாழ்வும் வளமும்

1924 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதி பொன்னாலைக் கிராமத்தில், ஈழத்தின் நவீன புனைக்கதை இலக்கிய வரலாற்றில் விடுபட முடியாத இலக்கியமுக்கியத்துவமுடையவராகக் கணிக்கப்படும் வரதர் என்ற தி.ச.வரதராசனின் (தியாகர் சண்முகம் வரதராசன்) தோற்றம் நிகழ்ந்தது. சண்முகம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் மூன்றாவது குழந்தையாக விளங்கிய வரதராசனுக்கு மூத்த இரு அக்காமாரும் ஒரு தங்கையும் கூடப்பிறந்தவர்கள். குடும்பத்தின் ஒரே ஆண் மகன் என்பதால் கட்டுப்பாட்டுடன் சேர்ந்த செல்லப்பிள்ளையாக அவர் வளர்ந்தார். வரதர் நடுத்தரக்குடும்பத்தைச் சேர்ந்தவர். புலாலுண்ணாத சைவ வேளாளர். தந்தை ஒரு வர்த்தகர். தனது வீட்டிலேயே முன்பக்க விறாந்தையைச் சிறு கடையாக மாற்றி வியாபாரம் செய்து வந்தவர். தாயார் சின்னத்தங்கம். ஒழுக்கம், நேர்மை, கடும்முயற்சி, செயற்றிறன் என்பன சிறுவயது முதலே வரதராசனுக்குப் போதிக்கப்பட்டு வந்த நன்னெறிகள்.

பொன்னாலை அமெரிக்கமிஷன் தமிழ் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியை தி.ச.வ பெற்றார். ஆறாம் வகுப்பை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், ஏழாம்வகுப்பைச் சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலையிலும், எட்டாம் வகுப்பைக் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் பெற்றார். சிரேஷ்ட தராதரப்பத்திர வகுப்பை மீண்டும் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றார்.

இரத்தினம்மா, அன்னம்மா, தங்கச்சியம்மா ஆகிய மூவரும் தி.ச.வ.வின் சகோதரிகள். இவர் தனது 27வது வயதில், சுழிபுரத்தில் பிறந்து மலேயாவில் வாழ்ந்த ஆறுமுகம் - மனோன்மணி தம்பதியின் மகளான மகாதேவியம்மாவை 1951ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம்திகதி தனது வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். மகாதேவியம்மா. தி. ச. வரதராசனுக்கு உறவினர். அவர்களுக்குச் செந்தாமரை.



தேன்மொழி, மலர்விழி என மூன்று புதல்விகள். செந்தாமரை ஒரு சித்த மருத்துவத்துறை வைத்தியர் சந்தான கோபாலன் என்பவரை மணந்து கபிலன், நங்கை, வாசன் ஆகிய பிள்ளைகளுடன் கனடாவில் வாழ்ந்து வருகின்றார். தேன்மொழி ஆசிரியை, பெற்றோருடன் யாழ்ப்பாணத்திலுள்ளார். மூன்றாவது மகள் மலர்வழி கணக்காளர் சித்தார்த்தன் என்பவரை மணந்து லண்டனில் உள்ளார். தமிழறிஞர் பொன். முத்துக்குமாரன் வரதரின் ஒன்றுவிட்ட தமையனார் ஆவார்.

தி.ச.வ. வின் தொழில் அச்சக முகாமையாளர். ஆரம்பத்தில் அவருக்கு நூல் வெளியீடுகளில் ஆர்வமிருந்ததே தவிர, அச்சகமொன்றின் உரிமையாளராக மாற வேண்டும் என்ற எண்ணமிருந்தில்லை. "மறுமலர்ச்சி" சஞ்சிகையை முதன் முதல் அச்சுப்பதிக்க, யாழ்ப்பாணம் ஸ்ரீபார்வதி அச்சகத்திற்குள் நுழைந்த போதுதான் அச்சகப்பரிச்சயமே ஏற்பட்டது. சஞ்சிகை விடயத்திலும், அச்சக விடயத்திலும் அவருக்கு இருந்த ஆர்வத்தைக் கண்டுகொண்ட பார்வதி அச்சக உரிமையாளர் திரு. சிவஞானபோதம், அவரை மனேச்சராக வருமாறு அழைப்பு விடுத்தார். 1948இல், ஸ்ரீபார்வதி அச்சகத்தில் வேலைக்குச் சேர்ந்தார் குறைந்தது மாதா மாதம் ரூபா 50- சம்பளமாகத் தரல்வேண்டும் என்ற வரதரின் கோரிக்கையைப் பார்வதி அச்சக உரிமையாளர் ஏற்றுக்கொண்டார். யாழ்ப்பாணன் என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதிய சிவக்கொழுந்து, தனது பாடநூல்களை பார்வதி அச்சகத்தில் அச்சிட முன்வந்தார். எழுத்துப் பிழைகளில்லாது சிறப்பாக அச்சிட்டமையால் தொடர்ந்து ஸ்ரீபார்வதி அச்சகத்தில் தனது நூல்களைப் பதிப்பித்தார். அதனால் சராசரியாக மாதம் ரூபா 180 வரை வரதருக்கு சம்பள வருமானம் கிடைத்தது. 1950களில், சிவக்கொழுந்து அவர்கள் வரதராசனுடன் சேர்ந்து ஓர் அச்சுக்கூடத்தை நிறுவ விரும்பினார். தன் பங்காக தனது காணியை ஈடு வைத்து ரூபா 2500 முதலீடு செய்ய வரதர் முன் வந்தார். அதே வேளை வரதரின் அச்சகத் திறமையைக் கண்ட ஆனந்தா அச்சக உரிமையாளர் சரவணமுத்து தனது அச்சகத்தை வரதருக்கு விற்க முன் வந்தார். சரவணமுத்துவையும், சிவக்கொழுந்துவையும் அச்சகத்தின் பங்குதாரராக்கி 1952இல் ஆனந்தா அச்சகத்தை பொறுப்பேற்றார். ஏனையோரின் பங்குப் பணம் முறையே பத்தாயிரமாக இருக்க, வரதரின் பங்குபணம் இரண்டயிரத்து ஐந்நூறாக இருந்தது. வரதரின்

கடும்உழைப்பினால் ஐந்து வருடங்களுள் சமபங்குதாரராகினார். சிவக்கொழுந்து பிரிந்து தனியே அச்சகம் ஒன்றினை நிறுவிக்கொண்டார். அதனால் சண்முகதாசன் என்ற இளைஞருடன் பங்களாராகி இன்றுவரை ஆனந்த அச்சகத்தை நடாத்திவருகினறார். 1952லிருந்து இன்றுவரை ஆனந்தா அச்சகத்தின் முகாமையாளராக வரதரே விளங்கி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. கலை இலக்கிய ஆர்வம்

வரதரின் இலக்கியப் பிரவேசம் மிக இளைமையிலேயே தொடங்கியமைக்குக்காரணம், சிறுவனாக இருக்கும் போது அவருக்கிருந்த வாசிப்புப் பழக்கமாகும். அவரைப் பன்னிரண்ட வயதிலே வாசிப்பு ஆர்வம் தொற்றிக்கொண்டது. அக்காலத்தில், மகாபாரதம், காத்தவராயன் கதை, அல்லியரசாணிமாலை, ஜகதலப்பிரதாபன், விக்கிரமாதித்தன் கதை போன்ற நூல்களை ஆரவத்தோடு படித்துள்ளார். பதின்மூன்று, பதின்னான்கு வயதுகளில் ஆனந்தபோதினி, பிரசண்டவிகடன், சந்திரோதயம் தொடர்ந்து வீரகேசரி போன்ற செய்தி இதழ்களிலும் வெளிவந்த கதைகளை வரிவிடாது படித்துள்ளார். டார்சான் சித்திரக்கதையையும் ஆசிரியர் எச்.நல்லையாவின் தொடர் கதைகளையும் விரும்பிப் படித்தார். வடுவூர் துரைச்சாமிஐயங்கார், வை. மு. கோதைநாயகி அம்மாள் போன்றோரின் நாவல்களை ஆர்வத்தோடு படித்துள்ளார்.

அவரை எழுத்துலகில் பிரவேசிக்க வைத்தது ஈழகேசரி ஆகும். 1930 ஆம் ஆண்டுதொட்டு சுன்னாகத்திலிருந்து நா. பொன்னையாவினால் வெளியிடப்படட ஈழகேசரி வரதரைக் கவர்ந்தது. அதில் மாணவர்களுக்கான கல்வி அனுபந்தம் என்ற பகுதியில் 1939இல் வரதரின் சிறியதொரு கட்டுரை வெளிவந்தது. அடுத்த ஆண்டு 1940இல், வரதரின் 16வது வயதில், ஈழகேசரி ஆண்டு மலரில் அவரின் முதலாவது சிறுகதையான “கல்யாணியின் காதல்” என்ற சிறு நூலை எழுதி வெளியிட்டுள்ளார். ஈழகேசரி இச்சிறு நூலுக்குத் தனது வாசிகசாலை பகுதியில் மதிப்புரை செய்து பாராட்டியிருந்தது. அதன் பின்னர் தி.ச.வ.வின் சிறுகதைகள்



ஈழகேசரியில் தொடர்ந்து வெளிவந்தன. அவை முதலில் வரன் என்ற பெயரிலும், பின்னர் வரதர் என்ற பெயரிலும் வெளிவந்தன. தி.ச. வரதராசனைத் தம் எழுத்தால் கவர்ந்தவர்களென மணிக்கொடி எழுத்தாளர்களைக் குறிப்பிடலாம். முக்கியமாகப் புதுமைப்பித்தனின் எழுத்துக்கள் அவரை அதிகம் பாதித்தன. கல்கி, கு.ப.ரா, மு.வரதராசன், வி.ச. காண்டேகர் ஆகியோரின் எழுத்துக்கள் அவரால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டன. புதுமைப்பித்தனின் எழுத்துக்களில் இருந்த பிரேமையால் தான் முதன் முதலில் ஆரம்பிக்கவிருந்த சங்கத்திற்குப் 'புதுமைப்பித்தர்கள் சங்கம்' எனப்பெயரிட விரும்பியிருந்தார். டாக்டர் மு. வரதராசனின் எழுத்துக்களில் இருந்த பிடிப்பினால்தான் தனது சிறுகதைத் தொகுதிக்கு (கயமை மயக்கம்) மு. வரதராசனின் முன்னுரையைப் பெற்றிருந்தார் என நினைக்கிறேன்.

வரதர் இலக்கியத் துறையில் காலடி வைத்த காலம் இலங்கை ஆங்கில ஆதிக்கத்தின் கீழிருந்த காலமாகும். இநதியாவில் காந்தியம், பாரதியம், பெரியாரியம் முதலான கருத்துக்கள் நிலவிக் கொண்டிருந்தன. பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துக்கள் நிலவிக் கொண்டிருந்தன. பெரியாரின் பகுத்தறிவுக் பத்திரிகைகளும் அக்கால எழுத்துக்களும் அவரைப் பாதித்தன. தன் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியவற்றை எழுதி, முட்டுத்தீர்த்துவிடும் ஆவேசம் அவரிடமிருந்தது. எனவே நிறையப்படித்தார். நிறையவே சிந்தித்து எழுதினார்.

## 3. வரதரின் சிறுகதைகள்

வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்துச்சிறுகதை வரலாற்றை எழுதி விட முயாது. ஏனெனில், ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் காலத்திலிருந்து இன்று வரை வரதர் படைப்பாளியாகவே வளர்ந்து வருகின்றார். ஆறு தசாப்தச்சிறுகதை வரலாற்றில் வரதரின் பங்களிப்பு இருந்து வருகின்றது. 1940ஆம் ஆண்டு வரதரின் முதல் சிறுகதையான "கல்யாணியின் காதல்" ஈழகேசரி ஆண்டு மலரில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து விரும்பிய விதமே (1941), கல்யாணமும் கலாதியும் (1941), குதிரைக்கொம்பன் (1941), தந்தையின் உள்ளம் (1941), ஆறாந் தேதி முகூர்த்தம் (1941), கிழட்டு நினைவுகள் (1941), விபச்சாரி (1943)

ஆகிய சிறுகதைகளை ஈழகேசரியில் எழுதினார். இன்பத்திற்கு ஓர் எல்லை (1946), ஜோடி (1947), அவள் தியாகம் (1948) முதலிய சிறுகதைகளை மறுமலர்ச்சியில் எழுதியுள்ளார். மாதுளம்பழம் என்ற சிறுகதை சுதந்திரன் ஆண்டு மலரிலும், கயமை மயக்கம், உள்ளுறவு, வாத்தியார் அழுதார் என்பன ஆனந்தனிலும், பிள்ளையார் கொடுத்தார், வீரம்,ஒரு கணம் என்பன தினகரனிலும், உள்ளும் புறமும், வரதர் ஆண்டு மலரிலும் புதுயுகப்பெண் கலைச்செல்வியிலும், வெறி தமிழ் எழுத்தாளர் சங்க ஏற்பாட்டிலும், கற்பு மத்திய தீபத்திலும் வெளிவந்துள்ளன. புதினம் பத்திரிகையில் வரதரின் இன்று நீ வாழ்ந்திருந்தால், ஓ இந்தக்காதல் ஆகிய இரு சிறு கதைகள் வெளிவந்துள்ளன.

வரதரின் இலக்கிய நோக்குக்குறித்தும் சிறுகதை இலக்கியம் குறித்தும் தெரிந்து கொள்வது அவரது எழுத்துக்களைப் புரிந்து கொள்ள உதவுமென நம்புகின்றேன். 'கவிதையோ, காவியமோ, கட்டுரையோ, நாடகமோ, நாவலோ உருவத்தில் அது எப்படி இருந்தபோதிலும் அதை இலக்கியமென்று சொல்லுவதற்கு இரண்டு தகுதிகள் இருக்க வேண்டும்' என்கிறார் வரதர். முதலாவது அதில் ஓர் இலக்கு இருக்க வேண்டும். அந்த இலக்கு மனிதனுடைய அகத்தையோ புறத்தையோ உயர்த்துவதாக அமைய வேண்டும் மற்றையது, அதைச்சொல்லும் விதம், நடை, கட்டுக்கோப்பு ஆகியவற்றில் சுவையும் நேர்த்தியும் இருக்கவேண்டும் என்று கூறுகிறார் வரதர்.

வரதர் தனது சிறுகதைகளை காலத்திற்குக் காலம் மறுபரிசீலனை செய்து பார்த்திருக்கிறார் என்பது புலனாகிறது. ஆரம்பத்தில், கற்பனை செய்து கதாபாத்திரங்களையும் நிகழ்வுகளையும் திறம்படக்கோத்து கதைகளைத் தான் எழுதியதாகவும், ஆனால் அந்தக்கதைகளில் மற்ற எல்லாம் இருந்த போதிலும், நல்ல கருத்துக்களை அவை மையமாகக்கொண்டு அமையவில்லை என்பதால் அவை தொகுதியாக்கம் பெறவில்லை என்கிறார். கருத்து வளம் நல்ல தொரு சிறுகதைக்கு உயிரைப்போன்றதென்பது வரதரின் கருத்து. எனவே "1940 லிருந்தே சிறுகதை எழுதி வந்துள்ள வரதர் ஐம்பதுகளின் பிற்கூறில் ஏற்பட்ட இலக்கிய உத்வேக வளர்ச்சியின் பொழுது தனது படைப்பாளுமையை கற்பு, வீரம் போன்ற சிறுகதைகள் மூலம் பதிவு செய்துள்ளார்." என்பது பேராசிரியர் கருத்து.



வரதர் சிறுகதைகளை மட்டுமன்றி குறுநாவல், நாவல் புனைக்கதை வகையிலும் தனது கால்களைப் பதித்துள்ளார். வென்றுவிட்டாயடி ரத்தினா, உணர்ச்சி ஓட்டம், தையலம்மா, ஆகிய குறுநாவல்களை மறுமலர்ச்சியில் வரதர் எழுதியுள்ளார்.

ஆனந்தனில் அவர் எழுதிய கயமை மயக்கம் கூட ஒரு வகையில் குறுநாவலாகக் கருதப்படக்கூடியதே. அவர் எழுதிய ஒரேயொரு நாவல் "காவோலையில் பசுமை" என்பதாகும். தினகரனில் 1998களில் தொடராக வெளிவந்தது. காவோலையில் பசுமை, தொடர்கதையாக வெளிவந்தாலும் தொடர்கதைக்குரிய விறுவிறுப்பின்றி, நாவலுக்குரிய இறுக்கத்தைக் கொண்டுள்ளது.

"யாழ்ப்பாண மக்களின் இடப்பெயர்வினடியாகத் தோன்றி, இற்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முந்திய சமூக பண்பாட்டு, பொருளாதார நிலைமைகளை ஆவணப்படுத்தும் ஓர் கதை, காவோலையில் பசுமை நாவலாகும். யாழ்ப்பாணக் குடா நாட்டின் வட மேற்கு மூலையில் அமைந்துள்ள நல்லபுரம் எனும் கற்பனைக் கிராமத்தை மையமாக் கொண்டு இக்கதை நகர்வதாயினும், அது ஒட்டு மொத்தமாக அக்கால யாழ்ப்பாணச் சமூகத்தையே காட்டுகிறது." என்பது நாகநளினி கந்தபிள்ளையின் கருத்து. காவோலையில் பசுமை சாதிய நாவலாகவும் கருதப்படக்கூடியது.

**4. வரதரின் "மறுமலர்ச்சி"**

1943 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இலக்கிய, ஆர்வம் மிக்க இளம் எழுத்தாளர்கள் சிலர் ஒன்றிணைந்து "தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்" என்ற பெயரில் எழுத்தாளர் சங்கம் ஒன்றினை நிறுவிக்கொண்டனர். இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது எழுத்தாளர் சங்கம் இதுவே. இந்தச்சங்கத்தின் பிதாமகர் தி.ச.வ. ஆவார். அவரோடு அ.செ. முருகானந்தன, க.கா.மதியாபரணம், க.செ.நடராசன்(நாவற்குழியூர் நடராசன்), ச.பஞ்சாட்சரசர்மா, க.இ.சரவணமுத்து (சாரதா), து.உருத்திரமூர்த்தி (மகாகவி), அ.ந.கந்தசாமி, கனகசெந்திநாதன், வை. ஏரம்பமூர்த்தி (ஈழத்துறைவன்) முதலான பலரும் இணைந்து கொண்டனர். இவர்களில் பெரும்பாலானோர் ஈழகேசரி இளைஞர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள்.

'எழுத்தாளர்கள், இலக்கிய இரசிகர்கள் ஆகியோரை ஒன்று சேர்த்து ஒரு சங்கம் அமைக்க வேண்டுமென்ற பெரு விருப்பம் தி.ச.வரதராசனுக்கு 1943களில் ஏற்பட்டது. அவ்வாறு அமையவிருக்கும் சங்கத்திற்குப் "புதுமைப்பித்தர்கள் சங்கம்" எனப்பெயர் வைப்பதென வரதர் முடிவு செய்திருந்தார். மேற்குறிப்பிட்டோர் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். 16.04.1943ஆம் திகதி யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள ரேவதி குப்புசாமி என்ற சிற்பக் கலைஞரின் வீட்டு விறாந்தையில் சுமார் பதினைந்து எழுத்தாளர்/இரசிகர்கள் கூடினர். சங்கம் ஒன்று அமைப்பதாக முடிவு எடுக்கப்பட்டு, அதற்குப்பெயர் சூட்டும் தீர்மானம் வந்த போது, வரதர் தான் ஏற்கனவே உருப்போட்டு வைத்திருந்த "புதுமைப்பித்தர்கள் சங்கம்" என்ற பெயரைச் சொன்னார். இப்பெயருக்குப் பெரும்பான்மையோர் எதிர்க்குரல் தந்தனர். அவர்களில் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் வை. ஏரம்பமுர்த்தி முக்கியமானவர் அவர் இச்சங்கத்திற்குத் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' என்ற பெயரைப் பிரேரித்து அனுமதிக்க வைத்தார். பெரும்பான்மையோர் முடிவிற்கு வரதர் சிரம் தாழ்த்தினார். அக்கூட்டத்தில் மறுமலர்ச்சி என்றொரு சஞ்சிகை நடாத்த முடிவு செய்து அதற்கு ஆசிரியராக வரதரைத் தேர்ந்தெடுத்தனர். அப்போது அவருக்கு வயது 19 ஆரம்பத்தில் மறுமலர்ச்சி கையெழுத்துப் பத்திரிகையாக வெளிவந்தது. சிறுவயதிலிருந்தே எழுத்து கவிதைபோல ஓவியம் வரைவதிலும் வரதருக்கு ஆர்வம் உண்டு. தான் பத்திராதிபராக இருந்து கையெழுத்துப் பத்திரிகைகளில் தன்னுடைய ஓவியத்திறமையையும் காட்டினார். மறுமலர்ச்சி மாறிமாறி ஆர்வமுள்ள இளைஞர்களால் படிக்கப்பட்டது. அது கையெழுத்துப் பத்திரிகையாக எத்தனை இதழ்கள் வெளிவந்தது. என்பது தெரியவில்லை. வரதரின் பத்திரிகை வெறி கையெழுத்துப் பத்திரிகையுடன் அடங்கி விடுவதாகவிருக்கவில்லை.

தமிழ் நாட்டிலிருந்து வரும் சஞ்சிகைகளைப் பார்க்கும் போதெல்லாம், யாழ்ப்பாணத்திலிருந்து அப்படி ஒரு சஞ்சிகையை வெளியிட வேண்டுமென்ற கனவு வரதருக்கு இருந்தது. மறுமலர்ச்சியை அச்சுப்பத்திரிகையாக்க வேண்டுமென்பது அவருடைய பெரும் தாகமாயிற்று. அச்சுப்பத்திரிகை என்பது பணத்தோடு சம்பந்தப்பட்ட விடயம். எனினும், வரதர், க.கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராஜன், பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா, க. இ. குமாரசாமி (க.இ.சரவணமுத்துவின்



தமையனார்) ஆகிய ஐவர் ஒன்று சேர்ந்து ஆளுக்கு ஐம்பது ரூபா தலைக்குரிய முதலீடாக இட்டு, ஸ்ரீபார்வதி அச்சகத்தில் மறுமலர்ச்சி இதழ் அச்சிடத் தொடங்கினர்.

"மறுமலர்ச்சி தொடர்ந்து 1946லிருந்த 1948 வரை இருபத்தி நான்கு இதழ்கள் வெளிவந்து, இலக்கிய உலகில் பெரும் சாதனை படைத்தது. தமிழகத்தில் சிறுகதைத்துறைக்கு மணிக்கொடி எப்படிப் புத்தூக்கம் அளித்ததோ அதே போல ஈழத்தில் சிறுகதைத் துறைக்கு மறுமலர்ச்சி புதியதொரு உத்வேகத்தை அளித்துள்ளது. மறுமலர்ச்சி ஏட்டில் இலங்கையர்கோன், சோ.நடராஜன், அ.செ.முருகானந்தன், நாவற்குழியூர் நடராசன், சம்பந்தன், பொ. கிருஷ்ணன், வல்லிக் கண்ணன், து. உருத்திரமூர்த்தி, சு. வேலுப்பிள்ளை, யாழ்ப்பாணன், சொக்கன், கி. சுப்பிரமணியம், ச.பஞ்சட்சரசர்மா, அ.வி. மயில்வாகனன். க.சி. குலரத்தினம், சு.ராஜநாயகன், முதலியார் குலசபாநாதன், கு.பெரியதம்பி, பா.கதிராயத்தேவி, பத்மா துரைராஜா, மா.பீதாம்பிரன், நடனம், கா.பொ. இரத்தினம், கார்த்திகேயன், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, தயா, புரட்சிதாசன், சு. வித்தியானந்தன், பண்டிதர் தர்மரத்தினதேரோ, வித்துவான் வேந்தனார், சோ. தியாகராஜன் முதலிய பலரும் எழுதியுள்ளனர். தனது படைபிலக்கியத்துறைக்கு மறுமலர்ச்சியை வரதர் நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

## 6. வரதரின் கவிதைகள்

வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்து நவீன புதுக்கவிதை வரலாற்றை எழுதி விடமுடியாது. ஈழத்துப் புதுக்கவிதைக்கு / வசன கவிதைக்கு வரதரே பிதாமகர் என்பேன். ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன், 1943இல் சித்திரைக்குழப்பத்தை வைத்து வரதர் ஈழகேசரியில் "ஓர்இரவிலே" என்றொரு புதுக்கவிதையை எழுதியுள்ளார். அதனைத்தொடர்ந்து மறுமலர்ச்சியில் பல கவிதைகளை வரதர் வெவ்வேறு புனைப்பெயர்களில் எழுதியுள்ளார். அவற்றில் "அம்மான் மகள்" என்றொரு கவிதை குறிப்பிடத்தக்கது. 1996இல் "யாழ்ப்பாணத்தார் கண்ணீர்" என அவரெழுதிய நெடுங்கவிதை காலப்பதிவேடாக மாறிவிட்டது.

வரதருடைய கருத்துப்படி “எல்லாச் சிறந்த எழுத்தாளருக்குள்ளும் ஒரு கவிஞன் இருக்கிறான். நல்ல எழுத்தாளர்களின் எழுத்து நடையிலும் கருத்திலும் ஒரு கவிதை நயம் இருக்கும். கவிதை என்பது எதுகை, மோனை, சீர், தளை எல்லாம் சரியாக அமைந்து ஓசை நயத்தை எழுப்ப வேண்டும். ஓசை நயமில்லாமல் கவிதையில்லை” என்ற கருத்திற்கு வரதர் முரண். “ஒரு கவிதையை எந்த உருவத்தில் படைத்தபோதிலும் அதில் “கவிதை நயம்” என்ற பண்டம் இல்லாமல் போகுமானால் அது கவிதை ஆகாது.

“வரதர் கதை எழுதத் தொடங்கிய காலத்திலேயே கவிதைகளையும் எழுதினார். அவர் எழுதிய முதற் கவிதையே ஈழகேசரியில் வெளிவந்த “ஓர் இரவிலே” என்பதாகும். சித்திரை இருபத்தெட்டில் ஏற்பட்ட குழப்பத்தால் மூன்று, நான்கு நாட்களாக ஒரே அடை மழை. ஊரெல்லாம் பெரு வெள்ளம். அவற்றுடன் புயலும் சேர்ந்து ஊரை ஒரு ஆட்டு ஆட்டியது.

“இருபத்தி எட்டென்று
யாரோசொன்னார்
இருண்டதடா மேகமெல்லாம்
அந்த வேளை
கருக் கொண்ட மேகங்கள்
விண்ணில் கூடி.........

அந்தக்விதை இப்படித் தொடங்குகிறது என வரதர் நினைவிலிருந்து சொல்கிறார். ஆனால் (அந்தக்கவிதை) பின்வருமாறே தொடங்குகிறது.

“இருள்!, இருள்!, இருள்!
இருளின் நடுச்சாமத்திலே
என் கால்கள் தொடும் பூமி தொடங்கி
கண்பார்வை கெட்டாத மேகம் வரை
இருள்!, இருள்!



பார்த்தேன்
பேச்சு மூச்சற்று
பிணம் போலக்கிடந்தது பூமி
இது பூமி தானா?
மனித சந்தடியேயற்ற
பயங்கரமான பேய்களின் புதிய உலகமோ?
ஓவ்! ஓவ்! என்றிரைவது
பேயா? காற்றா? பேய்க்காற்றா?
பேய்க்காற்று!".......... என இக்கவிதை விரிகின்றது.

அந்தக்காலத்தில் புதுக்கவிதை முயற்சி ஒன்று நடந்ததுண்டு. ந.பிச்சமூர்த்தி, க.நா.சு. நடாத்திய "சூறாவளி" என்ற புதுமையான சஞ்சிகையில் புதுக்கவிதைகள் வெளிவந்தன. அவற்றினை வரதர் படித்துணர்ந்துள்ளார்.

மறுமலர்ச்சியில் வரதர் எழுதிய "அம்மான் மகள்" யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் நயம்பட எழுதப்பட்டுள்ளது.

"சும்மா சும்மா என்றை மனசு
சுத்தித்திரியுது
சுருதி கெட்ட பாட்டுப் போல
சோர்ந்து போகுது
அம்மான்மகளைக் கட்டிக்கொள்ள
ஆசைப்படுகுது
அதையே நினைச்சு நினைச்சுப்பாத்து
நெஞ்சு புளுகுது

நேத்துச் சின்னக் குருவி போலை
நிண்ட பெட்டை தான்
நேரங் காலம் வந்திட்டுது
நிமிந்து நிக்கிறா
சேத்துக்குளத்துப் பூவைப் போல
பூத்து நிக்கிறா

சேலைகட்டிச்சட்டை போட்டுச்
சிரித்துப்பாக்கிறா

சோறு, புட்டுத் தின்ன யில்லை
சோர்ந்து போகிறாய்
சோலி என்ன தம்பி எண்டு
ஆச்சி கேக்கிறா
அத்தான் மெலிஞ்சு சாகப் போறன்
ஆதலி னாலே - அடி
அம்மான் மகளே சும்மா வாடி
ஆனாத் தன்னாலே"

நீண்ட பல ஆண்டுகளுக்குப் பிறகு, 1996இல் வரதர் எழுதி வீரகேசரியில் வெளி வந்த கவிதை "யாழ்ப்பாணத்தார் கண்ணீர்." அது பின்னர் தனி நூலாகவும் வெளிவந்தது. 1995, ஒக்ரோபர் 30ஆந்திகதி வலிகாமம் மக்கள் அனைவரும் தாம் வாழ்ந்த வீடுகளையும், தேடிய தேட்டங்களையும் கைவிட்டு ஓடில்லாத ஆமைகளாகவும் கூடில்லாத நத்தைகளாகவும் பயத்தோடும் பரதவிப்போடும் ஊர்களை விட்டு ஏதிலிகளாக ஓடிய மனுக்குலச் சோக நாடகம் வரதரின் நீண்ட கவிதையாக வெளிவந்துள்ளது. இந்த இடப்பெயர்வுச் சோக நாடகத்தின் முதற் காட்சியை அந்த நாடகத்தின் பாத்திரங்களில் ஒன்றாகி, மானிட வேதனைகளை முற்றாக அனுபவித்ததன் விளைவாக கவிதா ஆவேசமாக வரதர் அக்கித்தந்துள்ளார்.

"முப்பது பத்து
தொண்ணூற்று ஐந்தன்று
முன்னிரவு வேளை
மூதேசி வந்தது போல
பயங்கரச்செய்தி ஒன்று:
"பட்டாளம் வருகிறதாம்
ஓடுங்கள் ஊரை விட்டு
உடனே புறப்படுங்கள்



தாமதித்தால் ஆபத்து
தப்பாது உங்கள் உயிர்!"
என்றந்தச் செய்தி
எமனாக வந்ததம்மா
அடுத்த கணமே
அயலட்டை எல்லாரும்
கையிலே தலையிலே
காவும் பொருட்களுடன்
ஒழுங்கைக்கு வந்தார்கள்
..ஐயையோ, என்ன இது?
ஊர் முழுக்க அங்கே
ஓரேயடியாய் நடக்கிறது!
கட்டிய வீடும்
கமம்புலமும் அத்தோடு
தின்னாமல் குடியாமல்
பரம்பரை பரம்பரையாய்
பதுக்கி வைத்த சொத்துக்களும்
எல்லாமே விட்டு விட்டு
எங்கிவர்கள் போகின்றார்!
இராப்பொழுது மழைநேரம்
ஈ, காக்கை போல் அலைய
இவர் செய்த பாவமென்ன?"

- இவ்வாறு நீண்ட கவிதை விரிகிறது.

"ஊர் எழுந்தது. எல்லாமே விட்டு விட்டு எங்கிவர்கள்?" என்ற தலைப்புடன் வீரகேசரியில். இக் கவிதை வெளிவந்தது. காலத்தோடு ஒட்டிய கவிதையாக அது அமைந்தது.

"இந்த நீண்ட கவிதை சத்திய ஆவேசம் கொண்ட ஒரு கவிஞனின் ஆழ்மனதில் உறங்கிக்கிடந்த மானிட நேயத்தைத் தூண்டியிருக்கிறதென்பதற்குச் சான்றாகிறது. இந்த மானிட அவலம் புதுக்கவிதையாக வெளிவராவிடில் வரதர் என்ற கவிஞனால் நிச்சயமாக உறங்கியிருக்க முடியாது. சாதாரண மனிதனுக்கு ஒரு

இழப்பின் அல்லது தாங்கொணத் துயரத்தின் வெளிப்பாடு புலம்பலும் கண்ணீருமென்றால், கவிஞனுக்கு இது இலக்கியப் படைப்பாகத் தானிருக்க முடியும். அதனை வரதர் செய்திருக்கிறார்.

வரதரின் "யாழ்ப்பாணத்தார் கண்ணீர்" என்ற இந்தக் புதுக்கவிதை நூல், ஒரு கால கட்டத்து ஆவணம் என்ற நிலைப்பாட்டிற்கு அப்பால் தக்கதொரு கவிதை நூலாகவும் கணிக்கப்படத்தக்கதாக விருக்கின்றது மானிடசோகத்தின் கவிதா புலம்பலாக இந்த நூல் விளங்குகின்றது. ஒவ்வொரு வரியும் நாம் அனுபவித்த அனுபவத்தினையும், இழப்புக்களையும், ஏமாற்றங்களையும் எடுத்து விளம்புவதன் மூலம் நெஞ்சில் குருதி வடிய வைக்கின்றது. இந்தக் கவிதையில் சொன்ன விஷயங்களிலும் சொல்லாத விஷயங்கள் பல தொக்கி நிற்கின்றன. அவை கவிதைகளை உன்னிப்பாகப் படிக்கும் போது எஞ்சி நிற்கின்ற உணர்ச்சியினடியாகத் தெரிகின்றன. காலத்திற்குத் தேவையான ஓர் இலக்கியப் பணியை வரதர் இந்த நூல் மூலம் ஆற்றியுள்ளார்.

## 6 வரதரின் இதழியற் பணி

வரதரை ஒதக்கி விட்டு ஈழத்து இலக்கிய வரலாறு எழுத முடியாது. ஏனெனில் ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றுக்கு படைப்பாளிகளையும்தான் காலத்திற்குக்காலம் நடாத்திய மறு மலர்ச்சி, வரதர் ஆண்டு மலர், ஆனந்தன், தேன்மொழி, வெள்ளி, புதினம், அறிவுக்களஞ்சியம், மீண்டும் மறுமலர்சசி முதலான இலக்கியச் சஞ்சிகைகள் மூலம் தந்துள்ளார்.

## 7. மறுமலர்ச்சி

1946 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இலக்கிய உலகிற்குக் கிடைத்த ஓர் அரிய சஞ்சிகை மறுமலர்ச்சி. தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கத்தினரால் இது வெளியிடப்பட்ட தெனக்கூறப்பட்டாலும் தி.ச.வரதராசன், க.கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராஜன், பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மா, க.இ.குமாரசாமி



ஆகிய ஐவரே இதன் மூலகர்த்தாக்களாயினும் வரதரே முதல்வர். மறுமலர்ச்சி வெளியீட்டாளராக நாவற்குழியூர் நடராஜனும் இணைஆசிரியர்களாக தி.ச.வரதராசனும் அ.செ.முருகானந்தனும் முதலில் இருந்தனர். 1948 ஆம் ஆண்டின் 6வது இதழிலிருந்த இணை ஆசிரியர்களாக தி.ச.வரதராசனும் பண்டிதர். ச.பஞ்சாட்சரசர்மாவும் விளங்கினர். மறுமலர்ச்சி குறித்து ஏற்கனவே தனித்து ஆராயப்பட்டதால், விரிவாக இங்கு விளக்காதுவிடுவோம்.

## 8. வரதர் ஆண்டு மலர்

வரதர் 1949 - 1951 வரையான காலகட்டத்தில் பார்வதி அச்சகத்தில் முகாமையாளராக விளங்கிய வேளையில் ஆண்டுக்கு ஒரு சஞ்சிகையென ஒரு மலரை வெளியிடமுயன்றுள்ளார். 1950 ஆம் ஆண்டு "வரதர் புதுவருஷமலர்" என்ற பெயருடன் 80 பக்கங்களில் கலைமகள் சஞ்சிகை அளவில் அந்த மலர் வெளிவந்துள்ளது. அதன்விலை ஒரு ரூபா. அந்தமலரின் அட்டைப்பத்தினை செல்வம்ஸ் ஸ்ருடியோ உரிமையாளரான வை. ஏரம்பமூர்த்தியே வரைந்துள்ளார். கலைஞர்களிடையே பகைமை என்பது கருத்தியல் நிலையில் இருக்கலாம். தனிப்பட்ட முறையில் கோபதாபம் இருக்க முடியாது. வரதர் ஆண்டு மலர் சோ. சிவபாதசுந்தரத்திற்குக் காணிக்கையாக்கப்பட்டுள்ளது. உங்களுக்காக இந்த மலரைச் சிருஷ்டித்தேன் "உங்களுக்காக மட்டுமா, என்மனத்தள்ளே புதைந்துகிடந்து அடிக்கடி தலைதூக்கும் ஒரு ஆசைக்காகவும் இதைத்தயாரித்தேன்" என வரதர் தன் ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிடுகிறார்.

வரதர் புதுவருஷ மலரில் நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர் மகாகவி, க.பொ. இரத்தினம், கலைவாணன், கனக செந்தில்நாதன், யாழ்ப்பாணன், கு.பெரியதம்பி, பண்டிதர் க. இராசையா, நாவற்குழியூர் நடராஜன், அ.விஸ்வநாதன், பரமகம்ஸதாசன், அ.செ.மு. எஸ். டி. சிவநாயகம், வெள்ளவத்தை மு. இராமலிங்கம், தெ.செ. நடராஜா, அ.வி.ம, தாழையடி சபாரத்தினம், எம்.எஸ்.எம்.புகாரி, சர்மா, சரோஜினி, சாரதா, வரதர் ஆகிய படைப்புலகப் பிரமுகர்களின் படைப்புக்கள் வெளிவந்துள்ளன. மிகக் கனதியான மலர்.

## 9. ஆனந்தன்

வரதரின் மனதில் புதிய புதிய பத்திரிகைகள் வெளியிடுவதென்ற ஆசை கனன்று கொண்டேயிருந்தது. ஆனந்தா அச்சகத்தின் உரிமையாளர்களில் ஒருவராக மாறியதும், 1952களில் "ஆனந்தன்" என்ற சஞ்சிகையை வெளியிட்டார். "ஆனந்தன்" முற்றிலும் இலக்கியச் சஞ்சிகையாகவே வெளிவந்தது. ஆரம்பத்தில் ஆசிரியராக தி.ச. வரதராசனும், இணை ஆசிரியராகக் கவிஞர் யாழ்ப்பாணனும் விளங்கினர். அவ்வேளை யாழ்ப்பாணன் சிவக்கொழுந்து ஆனந்த அச்சகத்தின் ஒரு பங்குதாரர். அவர் விலகித் தனியாக அச்சகம் ஒன்றைப் பருத்தித்துறையில் அமைத்துக் கொண்டதும், ஆனந்தனின் இணை ஆசிரியராகப் புதுமைலோலன் பணியேற்றார்.

அக்கால கட்டத்தில் ஈழகேசரி, சுதந்திரன் முதலான பத்திரிகைகளில் நல்ல பல சிறுகதைகளைப் படைத்து கணிப்பீட்டுக்குரியவராகப் புதுமைலோலன் விளங்கினார். ஆனந்தன் சஞ்சிகையில் பழையவர்களுடன், புதியவர்களும் எழுதினர். இளங்கீரனின் புகழ் பெற்ற நாவலான தென்றலும் புயலும், புதுமைலோலனின் நாவலான "தாலி" ஆகியன ஆனந்தனிலேயே வெளிவந்துள்ளன. ஈழத்தின் தரமான சிறுகதைகளிலொன்றாகிய தாழையடி சபாரத்தினத்தின் "குருவின்சதி" ஆனந்தனிலேயே பிரசுரமாகியது. ஆனந்தனும் ஒன்றரை வருடப் பயணத்துடன் நின்றுவிட்டது.

## 10 தேன்மொழி

கவிதைக்காக வரதர் நடாத்திய ஏடு "தேன்மொழி" ஆகும். புரட்டாதி 1955 இலிருந்து தேன்மொழி மாதமொரு இதழாக வெளிவந்தது. ஈழத்தின் முதலாவது தமிழ்க்கவிதை இதழ் இதுவாகும். தேன்மொழியின் நிர்வாக ஆசிரியராக வரதரும், இணை ஆசிரியராக மகாகவியும் விளங்கினர். வரதர் தான் நடாத்துகின்ற சஞ்சிகைகளுக்குத் தகுதி வாய்ந்தோரையே இணை ஆசிரியராகத்



தேர்ந்தெடுத்துக் கொள்வார். ஈழத்தின் மிகச்சிறந்த கவிஞரான மகாகவி, கவிதை ஏடு ஒன்றிற்கு இணை ஆசிரியராக வந்தமை அதன் தரத்தைப் பேண உதவியது.

"கவிதைகளை மாத்திரம் தாங்கிய ஓர் இதழை வெளிக்கொணர வேண்டுமென்பது ஒரு எண்ணம், நவாலியூர் சோமசுந்தரப்புலவருக்கு ஒரு நல்ல நினைவுச் சின்னம் உருவாக்க வேண்டுமென்பது மற்ற ஒரு எண்ணம். இந்த இரண்டு எண்ணங்களும் சேர்ந்து தேன்மொழியை உருவாக்கிவிட்டன" என்கிறார் தேன்மொழி முதலிதழில் அதன் ஆசிரியர் வரதர். தேன்மொழியில் ஒரு கவிஞர் பட்டாளமே கலந்து எழுதியது; நவாலியூர் சோமசுந்தரப்புலவர், நாவற்குழியூர் நடராஜன், சாரதா, யாழ்ப்பாணன், சோதி, வி.கி இராசதுரை, மிருசுவில் அரிஅரன், அ.ந.கந்தசாமி, சோ.பத்மநாதன், முருகையன், மகாகவி, வரதர், தான்தோன்றிக்கவிராயர், காப்பியாற்றுக் காப்பியனார், செ.வேலாயுதபிள்ளை, தில்லைச்சிவன், நாவலியூர். சோ. நடராசன், மகேஸ்வரன், மணிபல்லவன், சோ. சண்முகபாரதி, பரிமளா இராஜதுரை, அம்பிகாபதி, பண்டிதர். சோ. இளமுருகனார், வித்துவான் வேந்தனார், அண்ணல், யுவன், இரா. இளந்திரையன் முதலான கவிஞர்கள் தேன்மொழியில் கவிதாமாரி பொழிந்துள்ளனர். வித்துவான் க. வேந்தனாரின் "காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக்கொஞ்சும் அம்மா" என்ற புகழ் பெற்ற கவிதை தேன்மொழியில் தான் வெளி வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. தேன்மொழி மொத்தம் பதினாறு பக்கங்களைக் கொண்டிருந்தாலும் கவிதைத்துறைக்கு ஆற்றிய சேவை மிகவதிகம்.

## 12. வெள்ளி

வரதர் நடாத்திய இன்னொரு மாத சஞ்சிகை வெள்ளி ஆகும். பல்சுவையான விடயங்களை உள்ளடக்கியதாக வெள்ளி இதழ்கள் வெளிவந்தன. வெள்ளி இதழ்கள் வரதரின் இன்னொரு வகையான இதழியற்பணியாக்கத்தின் வெளிப்பாடாக அமைந்தன. இருபது இதழ்கள் வரையில் வெளிவந்தாக அறிப்படுகின்றது.

### 13 புதினம்

அரசியல், இலக்கியம், சினிமா, அறிவியல், நகைச்சுவை என்பவற்றிற்காக வரதர் நடாத்திய பன்னிரண்டு பக்க வாரஇதழ் புதினமாகும். முதலாவது இதழ் 18.06.1961 இல் வெளிவந்தது. புதினம் இதழின் ஆரம்ப எட்டு இதழ்களில் சிரித்திரன் சுதந்திரன் கார்ட்டூன்களும் நகைச்சுவைகப்பகுதிகளும் சிவாஜி என்ற புனைப் பெயரில் வெளிவந்தன. பின்னர் வெளிவந்த புதினம் இதழ்களில் 'மாலா' என்ற புனைப்பெயரில் வரதரே கார்ட்டூன்களையும் ஓவியங்களையும் வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது வரதரின் இன்னொரு பரிமாணம். புதினமொரு செய்தி ஏடாகவே பெரும்பாலும் வெளிவந்தது, எனினும், சீலன் எழுதிய ஏமாற்றுக்காரி, ஈழத்துச்சோமு எழுதிய களனிநதித் தீரத்திலே, அசோகனின் விபசாரியா, கொலைகாரியா ஆகிய தொடர் கதைகளையும் புதினம் வெளியிட்டுள்ளது. முருகையன், நாவற்குழியூரான், மகாகவி, நீலாவணன், காசிஆனந்தன், இராஜபாரதி ஆகியோது கவிதைகள் புதினத்திலிடம் பிடித்துள்ளன. வெளிப்பூச்சு என்ற தலைப்பில் கனகசெந்திநாதன், சொக்கன், கே.டானியல், உதயணன், பத்மாகாந்தன் ஆகியோர் சிறுகதைகளைப் புதினத்தில் படைத்துள்ளனர்.

### 14. அறிவுக்களஞ்சியம்

மாணவ உலகின் பொது அறிவுக்காகவும், பொது விழிப்புணர்ச்சிக்காகவும் வரதரால் நடாத்தப்பட்ட அறிவியற் சஞ்சிகை அறிவுக் களஞ்சியமாகும். யூலை 1992இல் முதலாவது இதழ் வெளிவந்தது. இதன் ஆசிரியராக வரதரும், இணை ஆசிரியராக க. குணராசா(செங்கைஆழியான்)வும், துணை ஆசிரியராகக் கல்வயல் வே. குமாரசாமியும் விளங்கினர். மொத்தம் 37 இதழ்கள் வெளிவந்தன. இனியும் அதன் தொடர்ச்சியை வெளியிடுவதென்ற சிந்தனையுடனேயே வரதர் இருப்பதாக தெரிகிறது. செங்கை ஆழியானின் அறிவியற் சிறுகதைகள் ஐந்து வரை அறிவுக்களஞ்சியத்தில் வெளிவந்தன. அவை அனைத்தும் கலைக்கதிர் பத்திரிகையில் மறுபிரசுரமாயின.



வரதர் காலத்திற்குக் காலம ஏதாவது ஒரு சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றார். விநியோகத்திறன் குறைவால் அச்சிஞ்சகைகள் வெளி வந்த சொற்ப காலத்தில் சாதனைகளைப் படைத்து விட்டு, அற்ப ஆயுளில் மறைந்து விடுகின்றன என்ற உண்மை மறுப்பதற்கில்லை.

## 15. வரதரின் நூல்கள்

வரதருடைய படைப்புக்களில் ஏழு நூலாக்கம் பெற்றுள்ளன. நாவலர், வாழ்க நீ சங்கிலி மன்ன, கயமை மயக்கம், மலரும் நினைவுகள், பாரதக்கதை, யாழ்ப்பாணத்தார் கண்ணீர், சிறுகதை பட்டறிவுக் குறிப்புகள் என்பனவே அந்த ஏழு நூல்களாகும். வரதரின் பாடசாலைப் பருவத்திலேயே "நாவலர்கோன்" வெளிவந்தது. அதைச்சற்றத் திருத்தி 1949இல் நாவலர் என்ற பெயரில் மறுபிரசுரம் செய்யப்பட்டது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் வேண்டுகோளுக்கிணங்க புதிதாகவே எழதப்பபட்டு, 1979இல் புதிய பதிப்பாக வெளிவந்தது. 'குழந்தைகள் பருகும் முறையிற்பருக, எவ்வாறு பக்குவப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று, வெகு காலத்திற்கு முன்னமே எண்ணிய ஒருவர் வரதர்' என இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். வரதர் அவர்கள் பண்தமணி அவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்று, மிகச் சிறந்த முறையில் இந்த நூலை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலி மன்னனின் வரலாற்றை வரதரின் "வாழ்க நீ சங்கிலி மன்ன" விபரிக்கின்றது. கடைசி வரை நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய மன்னனை இந்நூல் மூலம் வரதர் தமிழ் கூறும் நல்லுலகம் அறிய வைத்துள்ளார்.

வரதர் 1960 இல் வெளியிட்ட சிறுகதைத் தொகுதி "கயமை மயக்கம்". ஆரம்பக்கதைகளைத் தவிர்த்து. தான் சிறந்ததாகக் கருதும் பன்னிரண்டு சிறுகதைகளைத் தொகுதியாக்கியுள்ளார். கயமை மயக்கம் தொகுதி, 1996இல் மீண்டும் சென்னையில் குமரன் பதிப்பதினால் "வரதர் கதைகள்" என்ற பெயரில் மீளப் பிரசுரிக்கப்பட்டது. வரதரின் நூலுருப் பெற்ற படைப்புக்களில் மலரும்





நினைவுகள் முற்றிலும் வேறுபட்ட ஒரு வகை நூலாகும். 1930 - 1940களில் யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலை இந்த நூல் விபரிக்கின்றது. மல்லிகையில் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் தூண்டுதலால் எழுதப்பட்ட இந்த நூல், மல்லிகையில் "தீ வாத்தியார்" என்ற தலைப்பில் பதினைந்து இதழ்களில் தொடராக வெளி வந்தது. பலராலும் சிலாகிக்கப்பட்ட கட்டுரைத்தொடராக இருந்து. இதனை மலரும் நினைவுகள் என்ற பெயரில் குமரன் வெளியீட்டினரின் உரிமையாளரான எழுத்தாளர் செ. கணேசலிங்கம் 1996இல் வெளியிட்டு வைத்தார்.

நாடறிந்த கதையான மகாபாரதத்தை இளைஞர்களுக்காக வரதர் மீளச்சொல்லிய ஆக்கமே பாரதக்கதை ஆகும். புகழ் பெற்ற இதிகாசங்களில் ஒன்றான இக்கதையை எல்லோரும் தெரிந்திருக்க வேண்டுமென விரும்பி வரதர் எழுதியுள்ளார். ஈழத்தைச்சேர்ந்த முத்துத்தம்பிப்பிள்ளை (பாரதச்சுருக்கம்), வை. ஏரம்பமூர்த்தி (பாரதச்செல்வம்) ஆகியோர் இவ்வாறான முயற்சியில் மீள எழுதியுள்ளனர். ஓர் ஆக்க இலக்கியக்காரின் கைவண்ணமாகப் பாரதக்கதை அமைந்துள்ளமையே அதன் தனிச் சிறப்பெனலாம்.

"யாழ்ப்பாணத்தார் கண்ணீர்" 1995 ஒக்ரோபர் 30ஆம் திகதி நிகழ்ந்த வலிகாம இடப்பெயர்வின் கவிதாவேசம் ஆகும். ஒரு காலகட்டத்தின் ஆவணம். மானிட சோகத்தின் கவிதா புலம்பல். எனக்குப் பொதுவாகப் புதுக் கவிதைகள் பிடிப்பதில்லை. அதற்காக அந்த இலக்கிய வடிவிற்கு நான் எதிரியல்லன். ஆனால், யாழ்ப்பாணத்தார் கண்ணீரிலுள்ள புதுக்கவிதைகள் எனக்குப் பிடித்துள்ளன. ஏனெனில் இதில் இருப்பவை சத்தியம், உண்மை.

"சிறுகதைபட்டறிவுக் குறிப்புகள்" வரதரின் இன்னொரு சிறிய நூல். சிறுகதை எழுத விரும்புவோருக்கான வரதரின் அனுபவக்குறிப்புகள் இந்த நூலிலுள்ளன. கயமை மயக்கம் சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் வரதரால் ஏற்கனவே எடுத்துக்கூறிய விடயங்களும் இந்த நூலில் மீளக் கையாளப்பட்டுள்ளன. வரதருடைய ஆக்கங்களில் இன்னமும் நூலுருப் பெற வேண்டியவை சிலவுள்ளன. அவருடைய நல்ல பல சிறுகதைகள் பல தொகுக்கப்பட்டு நூலாக்கம் பெறல்வேண்டும்.



ஈழகேசரியில் வெளிவந்த சில சிறுகதைகள் மல்லிகை, வெளிச்சம், சமூகத்தொண்டன், புதினம் ஆகிய சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகளை ஒரு தொகுதியாக்க முடியும் வென்று விட்டாயடி இரத்தினா, உணர்ச்சி ஓட்டம், தையலம்மா ஆகிய மூன்று குறுநாவல்களையும் தொகுத்து ஒரு குறுநாவல் தொகுதி வெளியிடலாம். ‘காவோலையில் பசுமை’ நாவல் நூலுருப்பெற வேண்டியதொன்றாகும். அனைத்துக்கும் மேலாக வரதர் எழுதிக்கொண்டிருக்கும் அவரின் சுயசரிதை நூலாக்கம் பெற வேண்டும்.

## 16. வரதர் வெளியீடுகள்

ஈழத்துத் தமிழிலக்கியத்தின் முக்கிய பிரசுர கர்த்தருள் ஒருவர் வரதராவார். வரதரின் இலக்கிய முக்கியத்தவம் அவரது இலக்கிய பிரசுர முயற்சியிலும் அழுத்தம் பெறுகின்றது. தொழில் முறையாக வரதர் அச்சக உரிமையாளராவார். வரதர் வெளியீடு என்னும் அவரது பிரசுராலயம் முக்கியமான நூல்கள் பலவற்றை வெளியிட்டது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் “இலக்கிய வழி” முதலில் வரதர் வெளியீடாகவே வந்தது. மகாகவியின் தொடக்க கால வெளியீடான “வள்ளி” என்பதும் வரதர் வெளியீடே. இவற்றோடு வித்துவான் பொன். முத்துக்குமாரனின் தமிழ் மரபு, சிலம்பின் சிறப்பு, பேராசிரியர் க.கைலாசபதியின் ஒரு நூல், முருகையனின் கோபுரவாசல், நீலவண்ணனின் வரலாற்றுச் சமகால ஆவணங்களான “24மணி நேரம்”, செங்கை ஆழியானின் “யானை”, “மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து” ஆகிய இரு நாவல்கள், சோமகாந்தனின் ஆகுதி நாவல், சாந்தனின் “ஒட்டுமா”, நாவற்குழியூர் நடராஜனின் “சில்ம்பொலி” முதலான நூல்கள் வரதர் வெளியீடாக வெளிவந்துள்ளன. சாமிஜின் அமிர்தலிங்கம் பற்றிய நூல் ஒன்றும், வி.பொன்னம்பலம் பற்றிய நூல் ஒன்றும் வரதர் வெளியீடாக வெளிவந்துள்ளன. இந்த நூல்களை நூலாசிரியரிடமிருந்து பணம் எதுவும் வாங்காமல் வெளியிட்டதுடன் அவர்களுக்கு அன்பளிப்பும் வழங்கியுள்ளார் இவை தவிர திருக்குறளுக்கு ஒரு பொழிப்புரை எழுதி ‘திருக்குறளும் பொழிப்புரையும்’ என்ற நூலை பத்தாயிரம் பிரதிகள் வரை வெளியிட்டுள்ளார். ஆங்கிலத் தமிழகராதி ஒன்றையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். “வரதரின் பல குறிப்பு” என்பது தமிழில் முதன்முதலில் வெளியிடப்பட்ட

"டிரெக்டரி" ஆகும். தமிழின் புத்தம் புதிய முயற்சி 1964ஆம் ஆண்டு முதல் 1968 வரை நான்கு வெளியீடுகள் வெளிவந்தன. வரதரின் மனதில் பல வருடங்களாக தமிழ் மொழியில் ஆங்கில டிரெக்டரிகளுக்கு நிகராக ஒரு பல குறிப்பை வெளியிடும் எண்ணம் கனன்று கொண்டிருந்தது. அதன் விளைவு 1964இல் பல குறிப்பாக வெளிவந்தது. அரசாங்கம், இலங்கையின் பௌதீக, பண்பாட்டு விபரங்கள். தொடர்பாடல் தகவல்கள், இலங்கை வரலாற்றுக் குறிப்புக்கள், கல்வி, தாபனங்கள், சங்கங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பொக்கிஷமாக வரதரின் பல குறிப்பு விளங்கியது.

**எனவே**

பவள விழாக் கண்ட நாயகன் தி.ச. வரதராசன் (வரதர்) (01.07.1999) ஈழத்து இலக்கிய வரலாற்றில் தவிர்க்க முடியாதளவு பாதிப்பினை புரிந்துள்ளார். "ஈழத்துச் சிறுகதை வரலாறு" என்ற இந்த நூல் அவர் பவள விழாவோடு இணைந்த ஆய்வு நூலாகும்.

## மதிப்புமிக்க மூத்தோன்

ஈழத்தின் தமிழர் நினைப்பட்ட அனுபவங்களை மிகுந்த உணர்திறனுடன் பதிவு செய்துள்ள படைப்புக்களுள் வரதரின் புனைகதைகள் இடம்பெறுவன. அவர்கதைகளில் மனித அவல வேளைகளில் ஏற்படும் விழுமியச்சிதைவு மிகுந்த நுண்ணுர்வுடன் சித்திரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சமூகப்பாங்கான எழுத்துக்களால் இவர் சமூகத்தின் பொதுவான முற்போக்குச் செல்நெறிக்கு ஆதரவு நல்கினார். வரதரின் 'கதைச்சனப்பாங்கு' அவதானிக்கபட்ட வேண்டியது. களத்தை அமைத்து அந்தப் பின்புலத்தில் மனித இயக்கங்களை எடுத்துக்காட்டும் முறைமை இவருடையது. கதைகூறுபவரின் ஆளுமையோடு 'இவர்' இணைந்து நிற்பார் வரதரின் இலக்கிய முக்கியத்தவம் அவரது இலக்கியப் பிரசுரமுயற்சியாலும் அழுத்தம் பெறுகிறது. வரதர் இன்று ஈழத்துத்தமிழ் எழுத்தாளரிடையே மதிப்புமிக்கதொரு மூத்தோனாக விளங்குகிறார்.

தியாகர் சண்முகம் வரதராசன் ஆகிய வரதர், ஈழத்திலக்கிய வரலாற்றில் விடுபடமுடியாத முக்கியத்தவமுடையவராவர். ஈழத்திலக்கிய வரலாற்றில் வரதருக்குரிய முக்கியத்துவதுக்கான இடம் மூன்று அம்சங்களினடியாக வருவது இவர்.



1. ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களுள் முக்கியமான ஒருவர்
2. ஈழத்து நவீன தமிழிலக்கிய வரலாற்றின் ஒரு முக்கிய நிறுவனமாக விளங்கும் 'மறுமலர்ச்சி' இயக்கத்தின் ஸ்தாபகஅங்கத்தவருள் ஒருவர்
3. ஈழத்துத்தமிழிலக்கியத்தின் முக்கிய பிரசுரகர்த்தருள் ஒருவர்

09 – 03 – 1996 — ***பேராசிரியர். கா. சிவத்தம்பி***

## பகுத்தறிவாளன்

வரதரின் எழுத்துக்களில் பகுத்தறிவான கருத்துக்களை, முற்போக்கான எண்ணங்களை எளிதில் காணலாம். சம்பவங்களை, நிகழ்ச்சிகளைக் கூறும் போது பெறும் கற்பனைகளைக் காண முடியாது படைப்பாற்றலுள்ள ஒரு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய உண்மையைத் துணிச்சலோடு கூறும் நேர்மை, வாய்மையைத் தெளிவாகப் பார்க்கலாம். அவரது எழுத்தக்களில் சமுதாய உணர்வு தொக்கி நிற்பதையும் தரிசிக்கலாம். அவர் தனது சிறுகதைகளில் ஆணித்தரமாகப் பல சமுதாய விழுமியங்கள் பற்றிய தன் கருத்துக்களைப் பதித்துள்ளார். வரதர் தமது எழுத்து வேலைகள் முடிந்துவிட்டதாக எண்ணாது மேலும் தமது படைப்பாற்றலை வெளிக்கொணர வேண்டும் என விரும்புகிறேன்.

23 – 06 – 1996 — ***செ. கணேசலிங்கன்***

## தனி நிறுவனம்

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் வரதரின் பங்களிப்பு மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. இதழியல், படைப்புத்துறை, கருத்தாக்க வெளிபாடு என்ற பல்துறைகளிலும் முழுமையானதும் வியப்பூட்டத்தக்கதுமான சாதனைகளை நிகழ்த்திய அற்புதமான மனிதர் இவர். ஒரு தனி மனிதரான இவர் எப்படி ஒரு பெரிய நிறுவனமாய் இயங்க முடிந்தது? வரதரின் இந்தத் திறனை இன்றைய தலைமுறைக்கு நாம் எடுத்துச் செல்லவேண்டும்.

01 – 06 – 1996 — ***செ. யோகநாதன்***

# நிகழ்ச்சி நிரல்

✦ தலைமை : கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்)
(தலைவர், யாழ் இலக்கிய வட்டம்)

✦ மங்கல விளக்கேற்றல்
: இலக்கிய கலாநிதி. பண்டிதர் க. சச்சிதானந்தன்
M.Phil(Lond), D.Lit (Jaffna)

✦ மௌன இறைவணக்கம்

✦ தமிழ் வாழ்த்து : திருமதி. குஞ்சலம்மா பசுபதீஸ்வரன்
(ஆசிரியை, மங்கையர்கரசி வித்தியாலயம்)

✦ வரவேற்புரை : ஐயா சச்சிதானந்தம்
(இணைச் செயலாளர், யாழ். இலக்கிய வட்டம்)

✦ தலைமையுரை

✦ வாழ்த்துரைகள்

❁ ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக், குருமகாசந்நிதானம்)

❁ கலாநிதி. பேராயர் எஸ் ஜெபநேசன்
(பேராயர், தென்னிந்தியத் திருச்சபை)

❁ மஹாராஜஸ்ரீ எஸ். ரி. சண்முகநாதக் குருக்கள்
(மாவை ஆதினம், மாவிட்டபுரம்)

❁ கலாநிதி, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி
(துர்க்கையம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பளை)

✦ கௌரவிப்புரை

❁ இலக்கிய கலாநிதி, மூதறிஞர், குகஸ்ரீ,
வித்துவான், க. சொக்கலிங்கம் (சொக்கன்)

✦ பொன்னாடை போர்த்தி, மாலையணிவித்து வாழ்த்துபவர்:

❁ பேராசியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

✦ இயற்றமிழ் வாழ்த்துரைகள்

| வாழ்த்துபவர்: | நிறுவனம் |
|---|---|
| ❖ கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை | - சன்மார்க்கசபை |
| ❖ பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ணஐயர் | - நியந்தரி |
| ❖ திரு. ஆ. இராஜகோபால் (செம்பியன்செல்வன்) | - தமிழ்எழுத்தாளர் ஒன்றியம் |
| ❖ திரு. யோசெப்பாலா | - யாழ் கத்தோலிக்க இலக்கிய வட்டம் |
| ❖ திரு ஜோன்ஸ்ரன் ராஜ்குமார் | - திருமறைக்கலாமன்றம் |
| ❖ திருமதி கோகிலா மகேந்திரன் | - தெல்லிப்பளை கலை இலக்கிய வட்டம் |
| ❖ திரு. க. தணிகாசலம் | - தேசிய கலை இலக்கியப் பேரவை |
| ❖ செல்வன் எஸ். குகபரன் | - தமிழ்ச்சங்கம், யாழ்.பல்கலைக்கழகம் |

- திரு. மெற்றாஸ்மயில் - பாரம்பரிய பண்பாட்டுக் கழகம்
- ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் - பண்டிதமணி நினைவு மன்றம்
- லயன் வி. மாணிக்கம் - நல்லூர் லயன்ஸ் கழகம்
- திரு. து. வைத்திலிங்கம் - மாவட்ட கலாசாரப் பேரவை
- திரு. எஸ். மகேந்திரன் - சைவபரிபாலனசபை
- திருமதி. சரோஜா சிவச்சந்திரன் - மகளிர் அபிவிருத்தி நிலையம்
- திரு. சு. வித்தியாதரன் - 'உதயன்' சார்பாக
- திரு. சி. வெற்றிவேலாயுதம் - 'வலம்புரி' சார்பாக
- கலாபூஷணம். க. கணபதிப்பிள்ளை – (கலாசாரப்பேரவை, வலி – மேற்கு)
- ந. ஞானசூரியர் - இணுவில் கலை இலக்கிய வட்டம்

✦ இசைத்தமிழ் வாழ்த்துரைகள் (பாமாலைகள்)

- இலக்கியகலாநிதி க. சச்சிதானந்தன்
- கலாநிதி. கவிஞர். இ. முருகையன்
- புலவர் . ம. பார்வதிநாதசிவம்
- கலாநிதி. கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை
- கவிஞர் . சோ. பத்மநாதன்
- கவிஞர். கல்வயல் வே. குமாரசாமி
- பிரசங்கபூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி
- கவிஞர். காரை. எம்.பி அருளானந்தன்
- கவிஞர். நல்லை அமிழ்தன்
- இளங்கவிஞர். தி. திருக்குமரன்
- இளங்கவிஞர். த. ஜெயசீலன்

✦ தேநீர் விருந்துபசாரம்

✦ சபையோர்கள் விழா நாயகரைக் கௌரவித்தல்

✦ நட்புரை வாழ்த்துக்கள்

- திரு. க. சிவராமலிங்கம்
- திரு. சு. வேலுப்பிள்ளை (சு.வே)
- பேராசிரியர் . செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
- திரு. தெணியான்
- திரு. கோ. சி. வேலாயுதம்
- திரு. சிற்பி. சிவ.சரவணபவன்

✦ பவள விழா நூல்கள் வெளியீடு

1. ஈழத்துச்சிறுகதை வரலாறு

வரதரின் பவளவிழாவை நினைவுகூரும் நூல்

— ஆசிரியர் : கலாநிதி. க. குணராசா

✦ வெளியீட்டுரையும் வாழ்த்துரையும்

*கலாநிதி எஸ். சிவலிங்கராசா*

(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

✦ முதற்பிரதி பெறுநர் :

*திருமதி ச. காங்கேயன்*

(உதவிக்கல்விப்பணிப்பாளர், நல்லூர் கோட்டம்)

✦ சிறப்புப்பிரதிகள் வழங்கல்

2. 'வரதர்' பவளவிழா மலர்

✦ வெளியீட்டுரை :

*புத்தொளி. ந. சிவபாதம்*

(பவளவிழா அமைப்பாளர் / பொருளாளர், யாழ்.இலக்கிய வட்டம்)

✦ முதற்பிரதி பெறுநர் : *விழாநாயகர்*

✦ ஏற்புரை - மூதறிஞர். வரதர் (தி. ச. வரதராசன் )

ஈழத்துப் படைப்பிலக்கியத்திற்கு ஆறு தசாப்தங்களாகப் பங்களிப்புச் செய்து வரும் முன்னோடி எழுத்தாளரின் இப்பவள விழாவில் கலந்து வாழ்த்துவதும் வாழ்த்துப் பெறுவதும் ஈழத்து இலக்கியத்தைக் கௌரவிப்பதாக அமையும். ஆதலால், தவறாது சமுகந் தருமாறு தயவாக வேண்டுகின்றோம். விழா குறித்த நேரத்தில் ஆரம்பித்து நிறைவுறும் என்பதையும் அறியத்தருகிறோம்.

கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்)
தலைவர், யாழ். இலக்கியவட்டம்.

புத்தொளி ந. சிவபாதம்
விழா அமைப்பாளர்,
பொருளாளர்,
யாழ்.இலக்கியவட்டம்.

ஏ.ரி. பொன்னுத்துரை,
ஐயா. சச்சிதானந்தன்
இணைச் செயலாளர்கள்,
யாழ். இலக்கியவட்டம்.

✦ ஈழத்துச் சிறுகதை வரலாறு - ரூபா 300/=
விழா மண்டபத்தில் ரூபா 250/=
(விரும்பியோர் வாங்கலாம்)

✦ பவளவிழாமலர் அன்பளிப்பாக வழங்கப்பெறும்

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்


வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்

வரதர்
பவள விழா மலர்
யாழ்


TEENAGERS
YOUNG PEOPLE ASK . . .
WHAT IF I HAVE A HEALTH PROBLEM? (Part 2)
Read how four young people learned to cope with challenging health problems.
(Look under BIBLE TEACHINGS > TEENAGERS)
© Bettmann/CORBIS
தீர்வா?
CHILDREN
உடலுறவு
'வரசர்'